1409

Regd. No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization.

தொகுதி 8 — 1917-௵ நவம்பர்௴ / பிங்கள௵ கார்த்திகை௴ — பகுதி 7

அ. ரங்கசாமி ஐயர், B.A., B.L., F.T.S., பத்திராதிபர்.

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2.

அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.
தபால் சார்ஜ் வேறு

மதுரை.
விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அட்டவணை

(CONTENTS.)

பக்கம்

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. 241
Current Events—R. Rangaswami Iyer, B. A.

2. பிரபத்தி வித்யை—வி. கே. தேசிகாச்சாரியார் 249
Prapathi—V. K. Desikacharri.

3. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர் 255
Elements of Theosophy—V. Venkusami Iyer

4. சுதேசக் கல்வி—ஆர். ரெங்காச்சாரி எம். ஏ., எல். டி., 258
National Education—R Rangacharri M. A., L. T.

5. ஜகத்குரு ஸ்தோத்திரங்கள். 268, 269
The World Teacher-Verses.

6. ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாளின் ஜனனதினம் 271
Mrs. Annie Besant's 71st Birth day verses

7. ஒரு கதை—சோமசன்மா 274
A Story—Somasarma

8. புத்தக விமர்சம்—Review of Books. 284

விலை] 'மரணபயம் வேண்டாம்.' [அணா 2.

ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். !!

காலம் சென்ற பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயர் பி. ஏ பி. எல்., எப். டி. எஸ்., ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை. பிரஹ்மக்ஞான சபை பிரசிடெண்டு அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. ஸ்ரீமான் லெட் பீடர் அவர்களுடைய அருமையான "To those who mourn" என்ற புத்தகத்தின் மொழி பெயர்ப்பு.

வெகு இலகுவாய் யாவரும் அறியும்படி தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. யாவரும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டியது. இத் தொகுதியில் முன் சஞ்சிகையில் 158-ஆம் பக்கம் பார்க்க.

விலை சொற்பம் அணா 2 மட்டும்

தபால் சார்ஜ் வேறு. ஸ்டாம்பு முன் அனுப்பிப் பெறுக.

பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

லெட் ஸ்ரீ. பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்

அவர்களுடைய அருமையான புத்தகங்கள்.

மகாலய பக்ஷமும் நவராத்திரியும் — அணா 1

காயத்ரீ ராமாயணம் — அணா 1

ரஹஸ்யார்த்தங்களை உணர்த்துவதில் மிகத் தேர்ச்சிபெற்ற இப்பெரியவரின் புத்தகங்கள் கிடைப்பது அரிது. ஆகையால் முந்துங்கள்.!!

ஸ்ரீ பி. எஸ். ராமசுப்பையர் புஸ்தகம்.

லோக குருவாகிய பரமன் வருவானேன். — விலை அணா 1

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

சாந்தி வசனம்.

5 - MAR 1924

எனும் தொடரில் பிர்மவித்தியா மஹாசபையைச் சேர்ந்த உயர்ந்த அனுபவிகளாற் கூறப்பட்டுள்ள அரிய ஆங்கில நூல்களை செந்தமிழில் தகுந்தவர்களால் மொழிபெயர்த்து மாதமொரு புஸ்தகமாக பிரசுரம் செய்து வருகிறோம். இதனூற் கிடைக்கும் சகல வருமானமும் இவ்வூர் தர்ம கல்விச்சாலைக்கே உபயோகமாகிறது. வருஷ சந்தா தபால் சார்ஜுள்பட இந்தியாவுக்கு ரூபா 2—0—0

டை டை வெளிநாடுகளுக்கு ரூபா 2—8—0

தனி நம்பர் (தபால் சார்ஜு பிரத்தியேகம்) 0—3—0

இதுவரையில் வெளியான புஸ்தகங்கள்:—

No. 1. கர்மபால போதம், No. 2. ஆத்மார்த்த ஒழுக்கப்பயிற்சி, கிரஹஸ்தாச்ரமம், No. 3. பக்தியின் மகிமை. இம்மூன்றும் செலவாகிவிட்டன.

4, 5, 6, ‘அவன் பெயரால்’ (2 புஸ்தகம்) 0—6—0
7to10 கல்விகற்பித்தல் ஈசுவரகைங்கரியம் 0—8—0
11, 12 ‘எனது பிரதிக்ஞை’ முதல்பாகம் 0—4—0

தேவையுள்ளவர்கள் ‘சாந்தி வசனம் ஆபீஸ்’ திருமீயச்சூர், பேரளம் போஸ்டு’ என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணா 1] [தபாற் கூலி வேறு

இச்சமயம் அவசியம் வாசிக்க
வேண்டிய புத்தகம்.!!

மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார்
சரித்திரச்சுருக்கம் அணா 1.

இப்புத்தகம் பிரஹ்மஸ்ரீ ப. நாராயணையர் எழுதியது. மிகவும் எளியதமிழில் யாவரும் அறியும்படி வரையப்பட்டது. அழகான தாளில் கண்ணுக்கு ரமணீயமாக அச்சிடப்பட்டது.

1½ அணா ஸ்டாம்பு அனுப்பி 1 பிரதி பெறுக.

பிரஹ்மஜ்ஞான சபை, மதுரை.

அணா 1] [தபாற் கூலி வேறு

கிடைத்தற்கரிது! அருமையான புத்தகம்!

எண்ணங்களின் ரகசியம்.

லேட் ஸ்ரீ ப. நாராயண ஐயர் இயற்றியது.

படங்களுடன் கூடியது.

நல்ல எண்ணம் எண்ணுவதின் அவசியமும் கெட்ட எண்ணங்களைத் தவிர்த்தலின் முக்கியமும், இச்சிறு புத்தகத்தில் நன்கு விளக்கப் படுகின்றன.

லேட் ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்களின்
இதரப் புத்தகங்கள்.

ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்	விலை	அணா 1
பிரஹ்மஜ்ஞானமும் பிரஹ்மஜ்ஞான சபையும்		பை 6
பகவான் கௌதம புத்தரின் சரித்திரம்	,,	பை 6
லோக குருவின் அவதாரங்கள்	,,	பை 6
காயத்ரீ	,,	அணா 6
மோனம் என்பது ஞான வரம்பு	,,	பை 6
'ஹிந்து' என்பவன் எவன்?	,,	பை 1
ஹெலினம்பாள் அம்மையார் சரித்திரச் சுருக்கம்	,,	பை 6

பிரஹ்மஜ்ஞான சபை, மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 } 1917-௵ நவம்பர்௴ / பிங்கள௵ கார்த்திகை௴ { பகுதி 7

தற்கால நிலைமை.

தற்காலத்தின் இயற்கையைக் காட்டும் முக்கியமான சுபசூசகங்களில் ஒன்று பெஜவாடா என்ற நகரத்தில் நாளிது நவம்பர்௴ 4உயில் கூடிய ஆந்திரதேசப் பஞ்சமர்கள் கூட்டம். நந்தனார், வால்மீகி, கபிலர், மதங்கன், ரோஹிதாஸ்முதலிய உத்தமர்களும், சபரி, முதலிய பக்தைகளும், சாரங்கி, அருந்ததி, உலூபி, முதலிய உத்தமிகளும் முற்காலத்தில் பஞ்சமகுலத்தில் பிறந்தும் உயர்பதவிபெற்று உலகத்தாரால் புகழ்ப்பெற்றார் என்று அவர்களுடைய பெயர்களால் சபாமண்டபமானது அலங்கரிக்கப்பட்டிருந்தது. பஞ்சமர் ஜாதியில் பிறந்து அவர்களை முன்னேற்ற, மடையச் செய்யும் துறைகளில் உழைத்துவரும் சுவாமி ஸஹஜாநந்தருடைய பெயரையும் கவனத்தைக் கவரும்படியான இடத்தில் வரையப்பட்டிருந்தது. சபாமண்டபம் நிறைய பஞ்சமர் கூடியிருந்தது மல்லாமல் மற்ற ஜாதியாரில் அநேகர் தங்களுக்கு இம்முயற்சியிலுள்ள அநுதாபத்

தைக் காட்டுவதற்காகக் கூடியிருந்தார்கள். பிராமணரும் மற்ற 'உயர்' குலத்தோரும் மிகவும் உற்சாகத்துடன் இக் கூட்டம் நன்ருய் நடைபெறும் வண்ணம் முயன்றதைப் பார்க்க மிகவும் சந்தோஷகரமா யிருந்தது. பஞ்சமரில் அநேகர் தம் செலவிலேயே இக்கூட்டத்துக்கு வந்தனர். மற்றவர்கள் வரும்படி அநேக பிராமணரும் மற்ற 'உயர்' குலத்தாரும் பொருளுதவினுர்கள் என்றும் அறியச் சந் தோஷிக்கிருேம்.

* * *

கிருஷ்ணு ஜில்லாவில் டோகிபாரு என்ற ஊர்க்கார ரான ஸ்ரீமான் சுந்தர வெங்கையா என்ற பஞ்சமர், வந்த பஞ்சமப்பிரதிநிதிகட்கு உபசாரவார்த்தை கூறினுர். ஸிக் கந்தரபாத்திலிருந்து இதற்காகவே வந்திருந்த ஸ்ரீமான் பா கிரெட்டிவர்மா என்ற பஞ்சமர் அச்சபைக்கு அக்கிராசன ராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று தலைமைபூண்டு செவ்வனே சபையை நடத்தினுர். நிஜாம்ராஜ்யத்தில் பஞ்சமரின் கேவல ஸ்திதியைக் கூடியமட்டில் உயர்த்துவதில் இவர் முக்கியஸ் தராயிருந்தவர். இவரது அரிய உபந்யாசத்தில் பஞ்சமர் களை நான்காவது வர்ணத்தவராகப் பிராமணரும், மற்ற 'உயர்' குலத்தாரும் ஏற்றுக்கொண்டால் அவர்கள் சீக்கிரம் மேம்பாடடைவார்கள் என்றும், அவர்கள் அப்படி ஏற்றுக் கொள்ளப்படுமுன், ஆவினிறைச்சியைத் தின்பதை விலக்க வேண்டுமெனவும், கட்குடித்தல் முதலிய தீயபழக்கங்களை விட்டுவிடவேண்டுமெனவும் நிபந்தனைக் குட்படுத்தப் பட் டாலும், எத்தனை பஞ்சமர்கள் அந்த நிபந்தனைக்கு ட்பட்டு நடக்கச் சித்தமாயிருக்கிறோம் என்று மனுக்கள் கொடுக்கத் தயாராகயிருக்கிருர்கள் என்பது ஆச்சரியத்தை விளைக்கும் என்றும், இப்போதுகூட நூற்றுக்கணக்கான பஞ்சமர்கள் பசுவின் மாமிசத்தை யுண்ணுமலும் அநேகர் ஊனையே தீண்டாதவர்களாயும் இருக்கிருர்கள் என்பது சாதாரண ஜனங்கள் அறியமாட்டார்கள் என்றும், மஹ

ராஷ்டிர தேசத்தில் சங்கராசாரியார் மாலர்என்ற பஞ்ச ம ஜாதியாரை சூத்திரராக ஏற்றுக்கொண்டார் என்றும், ஆகையால் பஞ்சமரை நான்காவது வருணத்தாராகப் பிரா மணர் ஏற்றுக் கொண்டால்தான் அவர்களுடைய ஸ்திதி உயரும் என்றும், படிப்பினல் மட்டும் அவர்களுடைய ஸ்திதி உயரும் என்று எண்ண நியாயமில்லையென்றும், மே லும் பஞ்சமர் சில ரஸ்தாக்களிலும் தெருக்களிலும் வரக் கூடாது என்ற நிர்ப்பந்தங்களிருக்கும்வரை, அவர்கள் கீழா ன ஸ்திதியை விட்டு உயரமுடியாது என்றும், நிஜாம் ராஜ் யத்திலுள்ள பஞ்சமர்தான், பஞ்சமருள் நாகரீகமுள்ளவ ராக இருப்பதற்குக் காரணம் மேற்கூறிய நிர்ப்பந்தம் அந் த ராஜ்யத்தில் இல்லாததுதான் என்றும், சங்கராசாரியா ருக்குக் கூட ஒரு காலத்தில் பஞ்சமனல் உபதேசம் செய் யப்பட்டதையும் ராமானுஜாசாரியாருக்கு அவரது மதப்பிர சாரணையில் பஞ்சமர் பெருதவிபுரிந்ததும், யாவரும் அறி வார் என்றும், பஞ்சமர் குலத்தில் ரிஷிகள், யுத்தவீரர்கள், அரசர்கள், கவிகள் எல்லோரும் இருந்திருக்கிறார்கள், என் றும், பஞ்சமர்தான் இந்நாட்டில் பூர்வீகமான குடிகள் என் றும், கூறினர்.

*
* *

சம்பளமில்லாமல் கட்டாயக் கல்வி கற்பித்தலவசிய மென்றும், பஞ்சமர்தங்களுடைய தீயவழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்றும், சட்ட சபைகளுக்குப் பஞ்சமர்கள் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்ப உரிமை வேண்டு மென்றும், இன்னும் சில தீர்மானங்களும் செய்யப்பட்டன. பஞ்சமர் என்று கூப்பிடுவது தங்களுடைய கௌரவத்துக் கு ஹீனமாயிருக்கிறதென்றும், இனிமேல் தங்களை ஆதி ஆந்திரர் என்று அழைக்க வேண்டுமென்றும் தீர்மானித் தார்கள்.

*
* *

கீழான அதாவது அனுபவமுதிர்ச்சியில்லாத ஜீவாத் மாக்களுக்கு அடையாளம் அறிவின்மை, குரூரத்தன்மை,

அசுத்தம், சஞ்சலசித்தம், விசுவாசமின்மை, முதலிய குணங்கள். ஜீவன் காட்டுத்தனமுள்ள ஸ்திதியிலிருந்து விகாஸமுறையில் கொஞ்சம் உயர்ந்தபதவிக்கு வருமுன்னர் இத்தகைய ஸ்திதியிலிருக்கிறுன். எந்த தேசத்தில் இத்தகைய அபக்குவஜீவர்கள் பிறந்து வாழக்கூடிய ஏற்ற சௌகரியங்களிருக்கின்றனவோ, அந்த தேசத்தில் தான் அந்த ஜீவாத்மாக்கள் கர்மதேவர்களால் பிறக்கும்படி செய்யப்படுகிறுர்கள். ஆனல் ஒரு தேசத்திலோ குடும்பத்திலோ, படிப்பை அதிகரித்து, ஜனங்களுக்கு சுகாதார வழிகளைக் கற்பித்து, அசுத்தமே யிருக்கவிடாமல் சுத்தப் பழக்கங்களைக் கற்பித்து, குரூரத்தன்மை தலை யெடுக்க வொட்டாமல் அன்பையும் ஒற்றுமையையும், கூட்டுறவையும் பரவச்செய்தால், அந்த தேசத்திலும் குடும்பத்திலும் கீழான ஜீவர்கள் பிறக்கமாட்டார்கள். எப்படி வீட்டை சுத்தமாயும் நிர்மலமாயும் வைத்துக்கொண்டால், தேள் முதலிய விஷ ஜந்துக்கள் உண்டாகாமல் செய்ய முடிகிறதோ, அம்மாதிரியே கெட்டஜீவர்கள் பிறத்தற்கு வேண்டிய சாதகங்கள் இல்லாமலிருந்தால் அவர்கள் பிறக்கமாட்டார்கள். ஆகையால் நம்முடைய க்ஷேமத்தின் மேன்மையைக் கோருகிறவர்கள், இக்காலத்தில் பஞ்சமர்கள் இழிவான ஸ்திதியிலிருப்பதால் நம் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் இழிவை விலக்க முயலுவது அவசியம். அப்படிச்செய்வதுடன் மேற்கூறியபடி பஞ்சமர்களுக்குள் கல்வியும், சுத்தமும், சுத்தமான பழக்கங்களும் பரவும்படி செய்யவேண்டும். அவர்களை அன்பாயும் அனுதாபத்துடனும் நடத்தவேண்டும். மற்ற ஜாதியாருக்கும், இவர்க்கும், போட்டியாவது போராட்டமாவது இல்லாமல் எல்லோருடனும் கூட்டுறவாய் வாழும்படி செய்யவேண்டும். இதற்கு வேண்டிய சாதனங்கள் பல. 'மேல்' ஜாதியார்களும் இம்முயற்சியில் அநுதாபத்துடன் சேரவேண்டும். பஞ்சமரும் முயலவேண்டும். எல்லாம் நல்ல பலனடைய வேண்டுமானுல் சர்க்காரினும் உதவி செய்யவேண்டும். இக்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சி காரணமாக, இம்மூன்று சாதனங்களும்

தெய்வசங்கல்பத்தினுல் சித்தித்திருக்கின்றன. ஆகையால் இம்முயற்சி சபலமாகும் என்பது நிச்சயம்.

* * *

முற்காலத்திலாவது இந்தியாவில் தன் வினைப்பயனுல் ஒவ்வொருவனும் தன்க்குத்தகுந்த ஸ்திதியில் பிறக்கிறுன் என்ற எண்ணமானது மிகுந்திருந்ததால் பஞ்சமர் ஸ்திதி கீழாக யிருந்தாலும் அநேகமாக அவர்க்கும் மற்ற ஜாதியாருக்கும் விரோதமாவது கொடுமையாவது இல்லாமலிருந்தது. ஆனல் இக்காலத்தில் அப்படியில்லை. மேனுட்டார் நாகரீகத்தின் சம்பந்தத்தினல், ஒவ்வொருவரும் தமக்கு உள்ள உரிமைகளை வேண்டுமென்று கேட்கத் தொடங்குகிறுர்கள்; மற்றவர்களுடன் தங்களுக்குப் போட்டிபோட்டுத்தான் தங்கள் உரிமைகளை யடைய வேண்டுமென்று எண்ணுகிறுர்கள்; ஆகையால் ஜாதிகளுக்குள் மாற்சரியமும் போட்டியும், பொருமையும் உண்டாகின்றது, சகோதரத் தன்மை குறைகின்றது. இது மேனுட்டு நாகரீகத்தின் இயல்பு. ஆனல் நம்மிந்தியாவின் புராதனமானதும் இருந்த போதிலும் ஸநாதனமானதுமான நாகரீகத்தின் இயல்பு என்னவென்ருல் கூட்டுரவு, சகோதரபாவம், ஒற்றுமை. இதற்கு மூலாதாரம் அன்பு. ஆகையால் நம்முடைய தேசாபிமானிகளின் பொறுப்பு மிகவும் அதிகமாக யிருக்கிறது. போட்டித்தன்மையை விலக்கி, கூட்டுரவு தங்கும்படியாக 'மேல்' ஜாதியாரும், பஞ்சமரும், அன்புபாராட்டி ஒழுக வேண்டுவது அவசியம்.

* * *

அன்புதான் ஒன்று சேர்க்கும். இந்தியாவிலுள்ள பற்பல மதஸ்தர்களும் ஒன்று சேர்ந்தால்தான் இந்தியாவானது ஒருமைப்படும். இந்தியாவானது ஒருமைப்படவேண்டியது காலதர்மம். பஞ்சாப் மாகாணத்தில் சில நாட்குமுன்னர் ஹிந்துக்கள் ராமலீலா உத்ஸவம் நடத்திய போது, மஹம்மதியர்கள் தெருக்களை அலங்கரித்து ஹிந்து மஹம்மதிய ஒற்றுமையை உணர்த்தும் வாசகங்களால் தோரணங்

கள் கட்டி, ராமலீலா உத்ஸவக் கூட்டங்கள் பவனிசெல்லும் தெருக்களில் விளக்குகள் ஏற்றி அலங்காரமாய்ப் பிரகாசிப்பித்து அந்தபஜனைகள் செல்லும் வழியெல்லாம் அவர்கள் மேல் மலர்களைத் தூவி அவர்களுக்கு மாலையிட்டு, இவ் விதமாக அளவளாவினார்கள்.

*
* *

இறைவனது திருவிளையாட்டு அத்யாச்சரியகாமானது. ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் ஒன்று சேர வேண்டிய தவசியம் என்பது உண்மையாயிருந்தாலும், அவ் வொற்றுமையைப் பெற இருதிறத்தாரும் செய்யும் முயற்சிகளை அதிகப்படுத்துவதற்காக இருவரும் விரோதமாயிருப்பதின் கெடுதியை நன்கு விளக்கக்கருதி, இந்தியாவின் ஒரு பாகத்தில் ஹிந்துக்களும் மஹம்மதியர்களுக்கும் சச்சரவு நேரிட்டது போலும்! பிஹார்மாகாணத்தில் ஒரு பாகத்தில் மொஹரம் பண்டிகையில் மகம்மதியர் பசுக்களை கொல்லாமலிருக்கும்படி சட்டாயப்படுத்துவதில் ஹிந்துக்களுக்கும் மஹம்மதியர்களுக்கும் கலகமானது ஏற்பட்டு மஹம்மதியர்களை ஹிந்துக்கள் கொள்ளையடித்து, ஹிம்சித்தார்கள் என்று தெரியவந்தது. இந்தக் கலகத்துக்கு உண்மையான காரணம் என்னவென்றும் நன்குய்த் துலங்கவில்லை. ஆனால் இந்தசங்கதி தந்திகள்மூலம் இந்தியாமுழுதும் பரவவே, ஆங்காங்குள்ள ஹிந்து மஹம்மதியப் பிரமுகர்கள், இவ்விபத்து நேர்ந்ததைப்பற்றி விசனித்து, இதனால் இருதிறத்தாருக்கும் துவேஷம் நேரிடாவண்ணம் முயன்றார்கள். இந்தியாவின் பற்பல பாகங்களில் மகம்மதியர்களுக்கு நேரிட்ட நஷ்டத்தையும் கஷ்டத்தையும் தீர்க்க ஹிந்துக்கள் பொருள்தானம் செய்துவருகிறார்கள். மகம்மதியர் பத்திரிகைகளும் ஹிந்துக்கள் பத்திரிகைகளும், ஹிந்து ஸமாஜங்களும், மகம்மதியர் குழாங்களும், இந்தக் கலகத்தால் இருமதத்தாரும் வேற்றுமையடையக் காரணமில்லையென்று வற்புறுத்துகின்றன. மேலும் இனி இத்தகைய கலகங்கள் நேரிடாவண்ணம் ஒவ்வொரு ஜில்லாவிலும்

தாலூகாவிலும், நகரத்திலும் இருதிறத்தாருடைய முக்கியஸ்தர்கள் மத்தியஸ்தர்களாக சபையொன்று ஏற்படவேண்டுமென்றும், இருமதஸ்தாருக்கும் முரண் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில இவர்கள் சந்தித்து யாதொரு முரணும் ஏற்படாதபடி முயலவேண்டுமென்றும் தீர்மானித்து வருகிறார்கள். அம்மாதிரியே பல நகரங்களில் மத்தியஸ்த சபைகள் ஏற்பட்டு இந்த வருஷத்தில் நவராத்திரி காலத்தில் வடக்கு இந்தியாவில் கொண்டாடும் தசரா உத்ஸவமும் மகமதியர் மொகரம் பண்டிகையும் ஒரே சமயத்தில் நடந்ததில், ஒருவர்க்கொருவர் கலகம் ஏற்படாதபடி பார்த்துக் கொண்டன.

***

ஆகையால் கனஸ்ரீ மாண்டேகு அவர்கள் வருங்காலத்தில் பிரமாதமாகப் புயல்போல் கூடிய மேகங்கள் எல்லாம் சடுதியில் விலகி, ஆகாயம் நிர்மலமாகியது போல், பிரமுகர்களுடைய புத்திசாலித்தனத்தால் யாவரும் ஒற்றுமையாயிருப்பது, இந்தியாவின் நல்லகாலமே.

***

சென்ற ஜூன் மீ௴ தியாசபிஸ்டு என்ற மாதாந்தரப் பத்திரிகையை நேராக நடத்திய பிரஹ்மக்ஞான சபை தலைவரவர்கள் மறுபடியும் நவம்பர் மீ௴ப்பத்திரிகையை திரும்பவும் நேரில் நடத்த இயன்றதைப் பார்க்க மகிழ்கிறோம். அவர்கள் இவ்வருஷம் கல்கத்தாவில் நடக்கப்போகும் காங்கிரஸ் மஹாசபையில் அக்கிராஸனம் வகிக்கும்படியான பெருமையை அடைந்திருக்கிறார்கள். இந்தியர் தம்முடைய நன்றி மறவாமையை இதன் மூலம் நிரூபித்தவர்களானார்கள். கனஸ்ரீ மாண்டேகு அவர்கள் இந்தியாவில் வந்திருக்கும் காலத்தில் நடக்கப் போகிற இக்காங்கிரஸ் மகா சபையானது மிகவும் விசேஷமானது. இந்தியாவின் ஐகமத்தியத்தையும், மேன்மையடையவேண்டுமென்ற தீவிர விரதத்தையும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் இந்தியா அடையக்கூடிய பெருமையையும்; இந்தியாவானது தனக்குரிய உன்னதமான பதவியை அடைவதற்கும் உலகத்தி

ற்கு பாரமார்த்திகமான உயர்ந்த உண்மைகளை குருஸ்தானத்தை வகித்து உபதேசம் செய்வதாகிய தன்னுடைய சுயதர்மத்தை நிறைவேற்றுவதற்கும் இந்தியாவானது பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் இதர அங்கங்களுக்கு ஒப்ப சமானமான கௌரவமான பதவியை அடையவேண்டியது மிக்க அவசியம் என்பதையும், யாவரும் ஒப்புக்கொள்ளும்படியான மாதிரியாக உதகோஷிக்கவல்லவர் உலகில் நம் தலைவரை விட யாருளர்? இங்கிலாந்தின் பெருமையிலும் இந்தியாவின் மேன்மையிலும், உண்மையான சமானமான பற்றுள்ளவரும், தேசங்களின் ஆந்தரமான விகாச முறையையும், ஈசுவர நியதியில் அவைகளுடைய தர்மத்தையும் சூக்ஷ்மதிருஷ்டியால் தெரிந்தவருமாகிய நமது அக்கிராசனருடைய விடாமுயற்சியும், உலகத்தின் க்ஷேமத்திற்காக உழைக்கும் சிரத்தையும், எப்பாடுபடினும் என்ன கஷ்டம் வரினும் உண்மையையே நாடும் சீலத்தையும், உலகத்தில் நாகரீகமுள்ள நாடுகளிலுள்ள யாவரும் அறிவர். ஆகையால் இந்த வருஷம் டிசம்பர் மீ˚த்தில் கூடும் காங்கிரஸ் மிகவும் விசேஷமானது.

*
* *

சென்ற சில வருஷங்களாக நடைபெறும் வழக்கப்படி காங்கிரஸ் கூடும் நகரத்திலே தான் பிரஹ்மக்ஞான சபையின் வருஷோற்சவம் நடைபெறுகின்றது. டிசம்பர் மீ˚ 30உயன்று காலையில் நமது பிரஹ்மக்ஞான சபை அக்கிராஸனருடைய பிரசங்கம் நிகழும். வழக்கம்போல் நடக்கவேண்டிய நான்கு முக்கிய பிரசங்கங்களும் முறையே ஸ்ரீமான் ஜீனராஜதாஸர், அருண்டேல், வாடியா, ஸதாசிவையர் இவர்களால் செய்யப்படும். இந்திய தேசீய வித்யா பீடத்தின் நிர்வாக சபையின் கூட்டமும் டிசம்பர்மீ˚ 31உ நடக்கலாம் என்று தோன்றுகிறது. எவ்வாற்றானும் இவ்வருஷத்தில் கல்கத்தாவில் கூடும் கூட்டங்கள் மிகவும் முக்கியமானவை. சௌகரியங்களுள்ள எல்லா ஸ்ரீமான்களும் ஸ்ரீமதிகளும் சென்று தங்களுடைய அறிவையும் அதிகரித்து தேச க்ஷேமத்தையும் நாடுவாராக.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

237-ஆம் பக்கத் தொடர்ச்சி.

அதில் சம்பலம், பாம்பலம், சங்கலம், கலாபம், பிருஹ்மலம் என ஐந்து ஸ்தானங்கள் உள. இந்த லோகத்தில் சூரிய பகவானுக்குப் பிரதிநிதியாயும், இப்பூமிக்கு ராஜாவாயும் இருப்பவரான ஸனத்குமாரர் சம்பலக் கிராமத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

अहं बृह्मांश संभूतः बृह्मज्योतिर्मयो र्षिः ।
विष्णो र्लोक हितार्थाय यातोहं बदरीवनम् ॥

"நான் பிரஹ்மத்தினுடைய அம்சம், பிரஹ்ம ஜோதி மயமான ரிஷி. விஷ்ணுலோகத்தின் ஹிதத்தின் பொருட்டு பதரீவனத்தில் வந்திருக்கிறேன்." அவ்வம்சமானது நான்கு பாகமாயிருக்கிறது.

चतुर्धाहं विभक्तात्मा चरामि जगतो हितः ।
लोकानां तारणार्थाय विधानं विदधामिच ॥

"லோகத்தின் க்ஷேமார்த்தமாக நான்குவித ரூபத்தை தரிக்கிறேன். லோகத்தைக் காப்பாற்றும் பொருட்டு நியதியை உண்டாக்கினேன்." இச்சுலோகம் சுத்ததர்மமண்டலத்தார் புத்தகமாகிய கீதையில் நரநாராயணதர்ம கீதையிலிருக்கிறது. ஸநத்குமாரர் தலைவர், ஸநகர், ஸநந்தனர், ஸநாதநர், ஆகியமூவரும் குமாரர்கள். ஆதி சங்கராசாரியார் அம்மூவரில் ஒருவர். இனி இதன்மேல் விஸ்தரித்துச் சொல்வதற்கு சாவகாசமில்லாததால், இவ்விஷயத்தை இத்துடன் நிறுத்துவோம்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையின் 15-வது அத்தியாயத்தில்

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वां सर्व पापेभ्यो मोक्षयिष्यामि माशुचः ॥

என்ற பிரசித்தமானதும், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் ரஹஸ்யத்திரயம் என்று சொல்லப்பட்ட மூன்று ரஹஸ்

யங்களில் மூன்றாவது ரஹஸ்யமானதுமான சுலோகத்தின் மூலமாய் அர்ச்சுனனுடைய வேண்டுகோளுக்கு பிரத்யுத்தரம் கொடுத்தார். அர்சுனன் சரணமடைந்தது மஹாபுண்யமான காரியம். அதனால்தான் உயர்ந்த ஞானமிருதம் என்று சொல்லக்கூடிய மஹா உபதேசம் லோகத்திற்குக் கிடைத்தது.

ஆனால் இரண்டாவது அதயாயத்தில் பிரார்த்தித்த பிரார்த்தனைக்கு 18-வது அத்யாயத்தில் பகவான் உத்தரம் சொல்வானேன் அவ்வளவு சாவகாசம் எதற்காக என்ற கேள்வியுண்டானால் இதற்குக் காரணம் என்னவெனில் கூறுவோம்.

காப்பாற்றுகிறேன் என்று வாக்குதத்தம் செய்யும் முன் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற பிரசித்தமான ஈசுவரனை அடையும் மும்மார்க்கங்களையும் உபதேசிக்கிறார். ஒவ்வொன்றிலும் ரஹஸ்யங்களை உபதேசித்த பிறகு, மும்மார்க்கத்துக்கும் முடிவானதும், அம்மூன்றையும் தன்னில் அடக்கிய பிரபத்தியென்னும் மார்க்கத்தைக் காட்டுகிறார். முன்னர்க்காட்டிய மும்மார்க்கங்களும் பின்னர்க் கூறிய பிரபத்திமார்க்கத்துக்குச் சாதனங்களேயாம். அவைகள் பிரபத்திமார்க்கத்தி லடங்கியவை. அம்மூன்றிலும் ஒவ்வொன்றிலும், மற்றிரண்டும் உள. ஆனால் ஒவ்வொன்றிலும் மற்றிரண்டினுடைய குணங்களைக்காட்டிலும் தன்னுடைய குணமே விசேஷித்திருக்கும். ஆனால் முடிவான மார்க்கமாகிற பிரபத்தியில் அம்மூன்று மார்க்கங்களின் குணங்கள் பரிபூர்ணமாய் விளங்குகின்றன. அதாவது பிரபன்னன் கர்மயோகத்திலும், ஞானயோகத்திலும் பக்தியோகத்திலும் பூர்ணபரிபக்குவமடைந்தவன். அவனே கர்மயோகி, பக்தியோகி, ஞானயோகி. அவனை மனுஷ்யபுஷ்பமாகச் சொல்லலாம். தானாகவே பிரபன்னனாகவேண்டும் வேறு ஒருவன் ஆக்கமுடியாது.

ஒருவன் எப்படி பிரபன்னனாகிறான்? பிரபத்தியை அடைய எவ்வித குணங்களை சம்பாதிக்கவேண்டும்? ஒரு

வன் தன்னுடைய ஹிருதய கமலத்தினுள் ஈசுவரனை தரிசிக்க வேண்டுமானால் அதற்குமுன் அவன் ஐந்து அங்கங்களை அல்லது குணங்களை உடைத்தாயிருக்க வேண்டும். அவையாவன

आनुकूल्य संकल्पं प्रातिकूल्य विवर्जनं
(1) ஆநுகூல்ய சங்கல்பம் (2) ப்ராதிகூல்ய விவர்ஜனம்
कार्पण्यम् गोप्तृत्ववर्णनं
(3) கார்ப்பண்யம் (4) கோப்திருத்வவர்ணனம் (5) மஹாவிசுவாசம்.

ஆனுகூல்ய சங்கல்பமாவது நமக்குக்கீழ்வரிசையிலிருக்கும் ஜீவகோடிகளின்பால் அன்பும் ஜீவகாருண்யமும் இருக்க வேண்டுமென்று மனதில் உறுதியாய் நிச்சயம் செய்வதே. அதாவது தான் ஈசுவரனையும் மற்ற ஜீவர்களையும் விட்டு வேறு அல்லஎன்ற உணர்வும் அவ்வீசுவரனோடுகூட பிரவிருத்தி நிவர்த்தி மார்க்கமாகிற அவனுடைய நியதிக்கு ஒத்து அவனுடன் ஒருமைப்பட்டு அந்நியதியை நடத்திவைப்பேன் என்ற சங்கல்பம் தான். தான்வேறு என்ற உணர்வுதான் மஹாமோஹம்என்பது. அம்மோஹத்தை ஜயிக்கவேண்டும் என்று செய்யும் சங்கல்பம்தான் ஆனுகூல்பசங்கல்பம் என்பது. அச்சங்கல்பம் செய்பவன்தான் லோகத்தில் தன்னுடைய உண்மையான ஸ்திதியை அறிந்தவன். தான் லோகத்திலே செய்யவேண்டிய காரியம் என்னவென்று அறிந்தவனாகிறான். அதாவது அவன் லோகத்துக்கு ஹிதனாகிறான். எல்லாருடனும் ஜீவ ஐக்கியத்தன்மையை யுணருகிறான். மனஸ்தத்துவத்துக்கு மேலான புத்திதத்துவப் பிரக்ஞையை அடைகிறான். தன்சுபாவ ஈசுவரகுணத்தை மனுஷ்ய சுபாவத்தில் மேன்மேலும் இறக்கிக்கொள்ளுகிறான். ஒவ்வொரு செய்கையையும் சக்தியையும் சந்தோஷத்துடன் ஈசுவரார்ப்பணம் செய்கிறான். அன்பின் பொருட்டுத் தன்னைத் தான் மறந்து தத்தம் செய்வான். இதுதான்சகோதரபாவம் என்று சொல்லப்பட்ட பிரஹ்மக்ஞான சபையின் முதலாவது உத்தேசம்.

ப்ராதிகூல்ய விவர்ஜனம் என்பது ஆநுகூல்ய சங்கல்பத்தில் அடங்கியதுதான். இரண்டு அங்கங்களும் ஒன்றேதான். ஆநுகூல்யத்தின் எதிரிடைதான் ப்ராதிகூல்யம். வாஸ்தவத்தில் ப்ராதிகூல்யத்தை விட்டுப்பழகினால்தான் ஆநுகூல்யத்தைப் பயிற்சிபண்ண முடியும்.

மூன்றாவது அங்கமான கார்ப்பண்யமென்பது அசக்தியென்று பொருள்படும். உபகாரம் செய்ய யாதொருமார்க்கமும் இல்லாமை.

अहमस्मि अपराधानां आलयो ऽकिञ्चनोऽगतिः

இதுதான் தீக்ஷையில் உத்யுக்தன் இருக்கவேண்டிய நிலைமை. அதாவது ஈசுவரகிருபாகடாக்ஷம் தன்பேரில் பொழியாதவரையில் தான் சம்சாரத்தினிடமிருந்துவெளிக்கிளம்ப அசக்தன் என்ற உணர்வு. அஹந்தையினால் தான், தான்வேறு என்கிற மோஹம் உண்டாகிறது. இம்மோஹத்தைக் கொன்றால் தான் ஈசுவரப்பிரசாதத்தைத்தேடலாம். அஃது என்எனில் ரூபபாவனையைவிட்டு உயிர் அல்லது ஜீவபரமாய் யக்ஞும்உள்பட யாவற்றையும் பார்க்குமளவில் தான் இவனுடைய திறந்த ஹிருதய கமலத்தின் கண் ஈசுவரனுடைய பிரகாசம் தோன்றும்.

நான்காவது கோப்திருத்வ வர்ணனம் என்றால் பகவானுக்குத் தான் தன்னந்தனியனாய் அகதியாயிருக்கும் ஜீவனைக் காப்பாற்றி கரையேற்றக்கூடிய சக்தி யிருக்கிறது என்ற உணர்வு. ஐந்தாவது அங்கம் மஹாவிசுவாசம் என்பது.

रक्षिष्यतीति विश्वासात् अभीष्टोपाय कल्पनं ॥
अप्रार्थितो नगो पयेत्तु ॥

காப்பாற்றுவான் என்ற விசுவாசமிருந்தால் உத்தேசபலன் சித்திக்கும். கேட்காமல் காப்பாற்றமாட்டான். அதாவது சீடன் தயாரானால் குரு காத்துக்கொண்டேயிருக்கிறார். நம்பிக்கைவேண்டியதுஎன்பதற்குத் தாத்பரியம் இதுதான்.

எவனொருவன் ஈசுவரனுடைய பலம் பிராணரூபமாகிய பிரகாசம் இவைகளைப்பெறப் பிரியமில்லாமலிருக்கிறானோ அவ்வாத்மாவிடம் அவைகளைப் பொழிய ஈசுவரன் தயாராயிரான். ஆகையால் மேலிருந்து ஞான விளக்கும்வாவேண்டுமானால் மஹாவிசுவாசமிருக்க வேண்டியது அவசியம்.

இவ்வைந்து அங்கங்களும் முக்கியமானவையென்பதை இராமாயணத்திலிருந்து இரண்டு உதாரணங்களால் காட்டுவோம். இராமாயணம் என்பது சரணாகதி சாஸ்திரமே. மஹா ஸாத்விகையான திரிஜடையினுடைய சரணாகதியிலும் மஹா பக்தனான விபீஷணனுடைய சரணாகதியிலும் இவ்வைந்து அங்கங்களும்பொருந்தியிருக்கின்றன என்பதை இப்பொழுது காட்டுகிறோம். திரிஜடையென்பவள் இலங்கையிலுள்ள ராக்ஷஸிகளை நோக்கி

तदलं क्रूर वाक्यैर्वः .

"போதும் இனி சீதையை நோக்கிக் குரோதவார்த்தைகளைச் சொல்லவேண்டாம்" என்று சொன்னவாக்கியத்தில் ப்ராதிகூல்ய விவர்ஜனம் என்றகுணம் ஏற்பட்டது. திரிஜடை

सत्वमेवा भिधीयतां ।

"பிரியமுள்ள வார்த்தைகளைப் பிராட்டியை நோக்கிச் சொல்லுங்கள் என்று ராக்ஷஸிகளை நோக்கிய வாக்கியத்தில் ஆநுகூல்ய சங்கல்பம் என்ற அங்கம் ஏற்பட்டது. மேற்படியாளுடைய

राघवाद्धि भयं घोरं राक्षसानां उपस्थितं ॥

"ராக்ஷஸர்களுக்கு ராகவனிடமிருந்தல்லவோ கோரமான பயம் ஏற்பட்டிருக்கிறது." என்ற வசனத்தினால் கார்ப்பண்யம் ஏற்பட்டது. ராக்ஷஸிகளுடைய அகங்காரம் எல்லாம் போய், ராகவனைத்தவிர வேறு கதியில்லை என்று தெரிந்து தங்களுடைய அசக்தியை நினைந்து பீதியை அவர்கள் அடைந்தவர்களானார்கள். ஹநுமார் ராக்ஷஸிகளை நோக்கி

अलमेषा परित्रातुं राक्षस्यो महतो भयाद् ॥

"பயப்படாதேயுங்கள். கதியற்றவர்களைக் காப்பாற்ற சீதா பிராட்டியே போதும்" என்று சொன்னார்.

अभियाचाम वैदेही मेतद्धि मम रोचते ।
भर्त्सितामपि याचध्वं राक्षस्यः किं विवक्षया ॥

என்றசுலோகங்களால் கோத்திருத்வவர்ணனம் ஏற்பட்டது. மேற்கூறிய வாக்கியங்களால் ஹனுமார் சீதையைப் பிரார்த்தியுங்கள் என்று சொன்னார். அந்த ஸ்திரீகளுக்கு ஈசுவர வியதியிலுள்ள விசுவாசத்தைப் பார்த்து சீதாப்பிராட்டியானவள் சந்தோஷப்பட்டு "உங்களுக்கு சரணம் உண்டாகட்டும் என்று அனுக்கிரகித்தாள். ராக்ஷஸிகளுடைய வணக்கத்தைப் பார்த்து மைதிலி சந்தோஷமடைந்தாள்.

வி. கெ. தேசிகாச்சாரியார்.

புத்தக விமர்சம்.

சாதாரணச்செடி கோடிகளைப் பாழாக்கும் பூச்சிகளைப்போக்கும்வழி. சென்னை விவசாய இலாகாவில் பிரசுரமாகும் 1917ஆம் வருஷத்து 7-வது துண்டுப்பத்திரிகை. இது மிகவும் உபயோகமுள்ளது. கத்தரி, அகத்தி, மொச்சை, அவரை முதலிய செடிகளைப் பாதித்து மிகவும் கெடுதி விளைக்கும் சிறு பூச்சிகளைப் போக்குவதற்கு அதிகச்செலவில்லாமல் வீட்டிலேயே செய்யக்கூடிய சில மருந்துகளை 4-பக்கங்களடங்கிய சிறு துண்டுப்பத்திரிகையாய் வெளியிட்டிருக்கிறார்கள். மண் எண்ணெயை கொதிக்கவைத்து சோப்புத்தண்ணீரில் கலந்து கலக்கியும், புகையிலைப் பொடி அல்லது காம்பை அதேமாதிரி காய்ச்சப்பட்ட சோப்புத்தண்ணீரில் போட்டு கஷாயம்செய்தும், செடிகளில் தெளித்தால் பூச்சிகள் இறந்துவிடும் என்று தெரிகிறது. நாப்தலின் என்ற வெள்ளைக்கட்டிச்சாமானை க்கடையில் வாங்கி பொடிசெய்து சாம்பலுடன் கலந்து முதலில் செடிகளை தண்ணீரால் நனைத்துப் பிறகு இப்பொடியைத் தூவுவதால் பூச்சிகள் நீங்குமென்றும், விசேஷமாக பூச்சியில்லாதபோனால் சோப்புத்தண்ணீரை இரண்டு மூன்றுதடவை செடிகளில் தெளித்தால் குணமாகும் என்றும் இதில் சொல்லப்படுகிறது (விபரங்களுக்கு துண்டுப்பத்திரிகையைப் பார்க்கவும்.) இது வீட்டில் பயிர்க்குழி போட்டிருக்கும் சகலருக்கும் உபயோகமாகயிருக்கும். இதைத் தமிழில் பிரசுரம் செய்யாது ஆங்கிலத்தில் அச்சிடுகிறார்கள் என்ற வருத்தந்தான் நம்மை பாதிக்கிறது. இனிமேல் முதன் முதலாகவே இவ்விதமாய் பொது ஜனங்களுக்கு உபயோகமாகும் விஷயங்களையெல்லாம் தமிழிலும் மற்ற சுதேசபாஷைகளிலும் வெளியிடுவார்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

24-வது அத்தியாயம்.

மனித சரீர அமைப்பு. (தொடர்ச்சி.)

பிராணமய கோசம்.

கேவலம் ஜடமாயிருக்கிற அன்னமய கோசமும் அதை பிரேரேபணை செய்துகொண்டிருக்கிற பிராணமயகோசமும் சேர்ந்து ஸ்தூலசரீரமென்று விவகரிக்கிறோம் வாஸ்தவத்தில் ஸ்தூல சரீரமென்பது ஒன்றல்ல. மேலே சொன்னபடி இரண்டு சரீரங்கள் சேர்ந்தது. ஸ்தூல திருஷ்டிக்கு கோசரமாயிருக்கிற அன்னமய கோசமானது பிருதுவி, அப்பு, வாயு ஆகியமூன்று திரவியங்களால் அமைக்கப்பட்டுள்ளது. சூக்ஷ்ம திருஷ்டிக்கு கோசரமாயிருக்கிற பிராணமய கோசமானது நுண்ணிய ஆகாய திரவியத்தால் அமைக்க பட்டுள்ளது. பிராணமய கோசமானது அன்னமய கோசம் போல யாதொரு வித்தியாசமுமன்னியில் அதே மாதிரியாய் இருப்பதால் அதற்குப் பிரதிபிம்பமென்று சொல்லலாம். இந்தப் பிராணமய சரீரமானது அன்னமய கோசத்தில் ஓதப்புரோதமாய் ஊடுருவிக்கொண்டு சாகும் வரை அதை விட்டுப் பிரியாமலிருக்கும். சிலசமயம் அன்னமய கோசத்தில் கால் கை முதலிய உறுப்புகளுக்கு அபாயம் நேரிட்டு அதை டாக்டர்கள் அறுக்கவேண்டி வரும்போது குளோரோபாரம் என்ற ஒருமயக்கமருந்தைக் கொடுப்பார்கள். அப்போது அந்த மருந்தின் வேகத்தைப் பொருக்க முடியாத பிராணமய கோசமானது அன்னமய கோசத்தை விட்டு சற்று விலகிக்கொள்ளும். அப்போது அன்னமய கோசமானது சோர்வடைந்து உணர்ச்சியற்றிருக்கும். டாக்டர்கள் அவ்வுறுப்புகளை அறுத்தெரியும்போது அன்னமய கோசத்துக்கு யாதொரு வலி முதலிய உபத்திரவங்கள் உண்டாகிறதில்லை. ஏனெனில் பிராணனுக்கு இருப்பிடமாயிருக்கிற பிராணமய கோசத்துடன் உணர்ச்சிக்கு இருப்பிடமாயிருக்கிற இச்சாசரீரமும் விலகிக் கொள்ளுகின்றது.

கொஞ்சநேரம் சென்றவுடன் அதாவது மருந்தின் வேகம் தணிந்தவுடன் பிராணமயகோசம் அன்னமய கோசத்துடன் சேர்ந்து கொள்ளும். சில சமயம் மேற்சொன்ன மருந்து அதிகமாய் உபயோகிக்கவேண்டி வரும்போது பிராணமய கோசம் பிரவேசிக்க முடியாமல் போகும். அப்போது ஸ்தூலசரீரம் இறந்துபோகும். இயற்கையாய்ச் சாகும்காலத்திலும் பிராணமயகோசம் பிறிந்து விடும். இவ்விதம் அது பிறிந்துபோனாலும் அன்னமயகோசமிருக்கும் இடத்தில் சில காலம்வரை சுற்றிக்கொண்டிருக்கும் அதை உத்தேசித்தே நம்முடைய முன்னோர்கள் அன்னமய கோசம இறந்தவுடன் அதை தகனம் செய்து வந்தார்கள். அவ்விதம் தகனமான பிறகு பிராணமய கோசமும் நசித்துப் போகும். அப்படிக்கின்றி அன்னமய கோசத்தைப் புதைத்தால் அந்தப் புதை குழியைச் சுற்றிக்கொண்டு பிராணமய கோசம் சிலகாலம் சஞ்சரிக்கும். அவ்விதம் சஞ்சரிக்கும் பொழுது அது சிலருடைய திருஷ்டிக்குப் புலப்படும். அதைக்கண்டு பிசாசென்று பயப்படுவார்கள்.

பிரேதங்களைப் புதைப்பதே வழக்கமாயிருக்கிற மேல் நாடுகளில் புதைகுளிகளுக்குச் சமீபத்தில் இராக்காலங்களில் இறந்து போனவனுடைய உருவத்தைச் சிலர் பார்ப்பதும் அதனால் மனக்கிலேசம் அடைவதும் இயல்பாயிருக்கிறது. அன்புள்ள தாய் தகப்பனார்களும் பெண்சாதி பிள்ளைகளும் சமீபத்திலில்லாமல் ஒருவன் இறந்து போகும் காலத்தில் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று அதிக அவாக் கொண்டிருந்தால் அவன் இறந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனுடைய பிராணமய கோசமானது பெற்றோர் முதலியவர்களின் கண்களுக்குப் புலப்படும். அவர்கள் அவனை நிச்சயமாய்ப்பார்த்ததாகவே சொல்லுவார்கள். அப்படிக் காணப்படும் பிராணமய கோசத்தின் விஷேசம் யாதெனில் அது பேசாமல் ஊமைபோல் அறிவற்றிருக்கும். தவிரவும் கொஞ்ச நேரத்தில் மறைந்து போம். அதைக் கண்டு நாம் பயப்படுவதும் மனகிலேசமடைவதும் அறிவின்மை. இதைப்பற்றி நம்முடையபுராணங்களில் சிலகதை

கள் உண்டு. ஒரு காலத்தில் இந்திரன் ஒரு பிராமணனைக் கொலை செய்ததாகவும் அவனை பிர்ஹ்மஹத்தி எங்கே போனாலும் தொடர்ந்து கொண்டிருந்ததாகவும் அவன் அநேக க்ஷேத்திரங்களுக்குப் போயும் விலகவில்லை என்றும் கடைசியில் ஹாலாஸ்ய க்ஷேத்திரத்துக்கு வந்து ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரனைத் தரிசனம் செய்து மஹா பாதோதக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த உடனே பிரஹ்மஹத்தி விலகி விட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது இறந்து போன பிராஹ்மணனுடைய பிராணமய கோசமேயொழிய வேறில்லை. இப்போதும் ஒருவன் வேறொருவனைக் கொலைசெய்து விட்டால் கொலையுண்டவன் சாகும் காலத்தில் பழிக்குப் பழி தீர்க்க வேண்டுமென்ற உறுதியுடன் இறந்திருப்பானாகில் அவனுடைய பிராணமய கோசமானது கொலையாளியைத் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் அவன் திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் இறந்தவனுடைய உருவத்தைப் பார்த்து நடுங்குவதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வுருவத்தைப்பார்த்து சகிக்க முடியாமல் அவன் தன் குற்றத்தை அதிகாரிகளிடம் ஒப்புக்கொள்ளுவதாகவும் சொல்லுகிறார்கள். இவ்விஷயங்களைப் பற்றி மிகவும் தெளிவாய் பிரஹ்மக்ஞானப் புஸ்தகங்களில் நாம் தெரிந்து கொள்ளலாம்.

வி. வெங்குசாமி ஐயர்.

நன்மொழி.

அத்த னமைத்த வுடலிரு கூறினிற்
சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்
சத்த பரிச வுருப ரசகந்தம்
புத்திமா னாங்கார‌ம் புரியட்ட காயமே.

எட்டினி லெட்டாகு மிந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாயிடு
மொட்டிய பாச முணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே.

3 திருமந்திரம் 2123— 4

சுதேசக் கல்வி.

192-ஆம் பக்கத்தொடர்ச்சி.

சுதேசக்கல்வி யென்ற விஷயத்தை ஆராய்ந்தறிவதற்கு முன்பு கல்வி என்பதன் பொருளைச் சற்று நோக்குவோமாக. 'கல்வி' என்பது 'கல்' என்ற வினையடியாய்ப் பிறந்த தொழிற்பெயர். 'கல்' என்றால் தோண்டுதல்; அதாவது ஒவ்வொரு ஜீவனிடமும் வித்துப்போலுள்ள ஞானத்தைத் தோண்டி எடுத்துப் பிரகாசிக்கச் செய்தல். ஆதலின் கல்வி என்ற சொல் ஒவ்வொருவனிடமும் இயற்கையாகப் பிறப்புடன் தோன்றின அறிவைத் துலக்குதல் எனப் பொருள் படும். இவ்விஷயத்தை யாவரும் நன்றாயறிதல் அவசியம். இதை மறந்து விட்டதால் தான் தற்காலம் நம்மிடம நடைபெறும் கல்விமுறை மிகவும் தாழ்ந்த நிலைமையையடைந்துள்ளது. கல்வி கற்பிக்கப் புகுமுன்னர் நாம் இரண்டு விஷயங்களை நன்றாய் மனதில் ஊன்றவைத்துக் கொள்ளவேண்டும்

முதலாவது, கற்கும் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் ஒரு ஜீவாத்மா. அது பரமாத்மாவின் ஸ்வரூபத்தை வித்துருபமாய்த் தன்னிடம் கொண்டுள்ளது; பரலோக நிவாஸத்தையுடையது, அழிவற்றது. இவ்வுலகில் சில கார்யங்களை நடத்தும் பொருட்டுப் பொய்பாகிய உடலைப் போற்றி உலகில் வாழ்ந்து தனது அநுபோக காலம் முடிந்தவுடனே அவ்வுடலைத் துறந்து பரலோகஞ் செல்கின்றது. சிலநூற்றாண்டுகட்குப் பின் அது மறுபடியும் அவ்வாறே பிறந்து உலகிற்பல அநுபோகங்களைப் பெற்று மேல் லோகங்களையடைகின்றது; இவ்வாறு பலமுறை பிறந்து இறந்து உடலைப்பெற்று அதைத் துறந்து கடைசியாக ஞானம் நிரம்பப் பெற்று பகவானுடன் கலக்கின்றது.

இரண்டாவது, அந்த ஜீவன் சில காலங்களில் புருஷனாகவும் சிலகாலங்களில் பெண்ணாகவும் பிறக்கலாம். ஆதலின் புருஷனாயினும் பெண்ணாயினும் ஒவ்வொரு ஜீவனும் இவ்

வுலகில் தோன்றியபோது சில காரணங்களினால் இங்கு வந்துள்ளதெனநினைத்து, அதற்கு வேண்டிய உதவியை நம்மாலியன்றவாறு செய்வது நமது கடமையாகும். அவரது குணங்கள் சிறக்கவும், அவரது அறிவு விரியவும் நாம் ஒவ்வொருவரும் துணையாகவேண்டும். அஃதின்றேல் அறிவு முதிர்ச்சிபெற்ற நாம் பிறந்தும் பிறவாததற்குச் சமானந்தான். இதைச்செவ்வனே உணராதோர் குழந்தைகளுக்குக் கற்பிக்கவும் அவருடன் பழகவும் முன் வருவதற்கு அதிகாரங்கிடையாது. சிலர் செய்வதுபோலக் குழந்தைகளை மிரட்டிப்பயமுறுத்தியடித்து அவரது நற்குணங்கள் வெளித்தோன்றுமல் செய்து, தீக்குணங்களின் வித்துக்களை அக்குழந்தைகளின் மனதில் விதைப்பது இயற்கைக்கு விரோதமானதும் கடவுளின் மனதிற்கு அதிருப்தியை விளைக்கக் கூடியதுமாகுமென நாம் இங்கு கூறவேண்டாம்.

இதனால் உலகிற்பிறந்தோர் ஒவ்வொருவரும் பரமாத்மாவின் அம்சமெனவும், உலகிற்பிறந்தோருள் இளையரெனக்கருதப்படும் ஜீவாத்மாக்கள் பலஜன்மங்களாகத்தாம் சேமித்துவைத்த அனுபோகவறிவால் முதறிவாளராக விருத்தலுங்கூடுமெனவும் நாம் உணருவது அவசியமன்றோ?

இனி தற்காலம் நமது நாட்டில் நடைபெறும் படிப்பினைப்பற்றிச்சிறிது ஆராய்வோம். நமது புராதன முறையெல்லாம் நிலைபுரண்டுபோக, ஆங்கிலவித்தையும் ஆங்கில முறைகளும் இப்போது ஒரு நூற்றாண்டாக நிலவுகின்றனவென்பதை யாவரும் அறிவர். இவற்றின் பயனாக நமது நாட்டில் எல்லாம் நிலைதளர்ந்து தலைதடுமாறிக்குழம்பிக் கிடக்கின்றன. ஆங்கில விற்பன்னரும் நமது தற்காலக் கல்வியின் போக்கையும், கல்விமுறையின் கலக்கத்தையும் கண்டு அதிருப்தி கொண்டு, பலவிதமான மாறுபாடுகளை அடிக்கடி செய்து வருகிறார்கள். சென்ற 25 வருஷங்களுக்குள்ளாக எத்தனை மாறுபாடுகளை நமது கல்விமுறை பெற்றுள்ளது. கல்வியின் நோக்கந்தான் யாதென்பது நம் நாட்டில் இன்னுந்தெளிவாக ஏற்பட்டிலது. எக்கலாசாலையைப்பார்த்தாலும் ஆங்கிலத்திற்கும் ஆங்கிலமுறைகளுக்

கும் பிராபல்யமேற்பட்டுள்ளது. சர்வகலாசாலைச்சங்கத்தாருள் ஆங்கிலரே முக்கியஸ்தராகவிருப்பதால், தாம் கருதும் திருத்தங்களே இந்தியர்க்கு மேன்மையைத்தருவனவெனக்கொண்டு, வல்லான் வகுத்ததே வாய்க்கால் யென்றநியாயப்படி தமதிஷ்டம்போல் திருத்திவிடுகிறார்கள். நம்மவருக்கு அவரை மீறிக்காரியம் நடத்தும் வலி இல்லாததால், சிலர் வாயில்லாப்பூச்சிகளாயும், சிலர் கனாக்கண்டஊமர் போலவும் வாய்திறவாது வாளாவிருப்பர். சிலர் வனாந்திரத்திற் பூத்த நறுமலர் போலப்பயனின்றி வாணாள் கழிப்பர். நமது இளஞ்சிறார்களோ பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். வரவரப் படிப்பதற்கு ஏராளமான பணம் வேண்டியிருக்கிறது. ஏழைப்பிள்ளைகள் தற்காலம் படித்துக்கடைத்தேறுவது அசாத்தியத்திலும் அசாத்தியம். சம்பளமோ அதிகம். சம்பளமின்றிப் படிப்பதென்றால் அது எல்லோருக்குங்கிட்டுமோ? நமது பள்ளிச்சிறார்களின் உடை ஆங்கிலரதைப் பின்பற்றியுள்ளதால் அவ்வுடையை தாம் பெறுவதற்குப் பன்மடங்கு பணம் வேண்டும். புஸ்தகங்களின் விலையோ சொல்லவேண்டுவதில்லை. புஸ்தகம் சிருஷ்டிப்பது ஆங்கிலரிடம் ஒரு பெரிய வித்தையாக மாறிவிட்டது. இதை 65-வது கலைஞானமாக நாம் தாராளமாகக் கைக்கொள்ளலாம். இவ்வித்தையில் கைவந்த நமது ஆங்கில நண்பர்கள் ஒரே சரக்கை வைத்துக்கொண்டு கூட்டியுங்குறைத்தும், விரித்தும் தொகுத்தும், ஒன்றிரண்டு புதிதாகச்சேர்த்தும், நூற்றுக்கணக்கான நூல்களை நூதனமாகவியற்றி அவைகளைப் பாட புஸ்தகமாக வைப்பதற்குப் பலமான முயற்சி செய்கிறார்கள். ஒரு வருஷப் பாடப் புஸ்தகங்கள் மறுவருஷம் பாடப் புஸ்தகமாக விருப்பனவல்ல அவருடைய வலையிற் சிக்குண்ட உபாத்தியாயர் பாட புஸ்தகங்களை மாற்றிவைப்பதில் மனங்களிக்கின்றனர். தமது மதிமயக்கத்தால் பிள்ளைகள் படுந்துயரை அவர் கருதுவதில்லை: முன்னாளில் ஏடுகளை எழுதிப்படித்ததைப்போல் சமீபகாலத்திலும் புஸ்தகங்களையும் எளியபிள்ளைகள் எழுதிப்படித்ததை நாம் காணவில்லையா? இப்போது ஒவ்வொ

ருவரும் புஸ்தகம் வாங்கவேண்டுமென்று உபாத்தியாயர் உபத்திரவஞ்செய்கிறார்கள். வாங்காவிடில் வகுப்பைவிட்டுத்துரத்தப்படுகிறார்கள். குறிப்புப்புஸ்தகங்களோ இக்காலம் அநேகம் வேண்டும். அவைநன்றாக கட்டப்பட்டிருத்தல்வேண்டும். பாவம்! ஏழைப்பிள்ளைகள் என் செய்வார்கள். இது நிற்க.

தற்போது எழுந்த கிளர்ச்சி காரணமாக பாடப் புஸ்தகங்கள் இந்தியர்களுக்குப் பயன்படும்விதமாக எழுதப்படவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார்கள். சின்னாள் முன்வரை இந்தியமாணவர்க்கும் அவர்கற்கும் நூல்களின் விஷயங்களுக்கும் தொடர்பு யாதொன்றுமில்லை. இந்தியாது புராணேதிகாச கதைகளையும், நீதிகதைகளையும், தொன்னூல் ஆராய்ச்சிகளையும், பாரம்பரிய நடைபொழுக்கங்களையும் ஒட்டிபாட புஸ்தகங்கள் எழுதப்படவேண்டுமென்று முடிவுசெய்தவுடன் நமது நன்மைக்காகப்பாடுபட்டுத் தம்மிடம் பொருள் குவிக்கும் நமது ஆங்கில நேசர்கள் புதிய நூல்களை இயற்றுவித்துப் பள்ளிக்கூடங்களை நிரப்புகிறார்கள். நம்மவரோ கவலையின்றி அவரிடம் கூலிக்குழைத்து வயிறு பிழைக்கிறார்கள். ஆங்கிலரைப்போல நாமும் ஏன் பாடப்புஸ்தகங்கள் எழுதிப்பயன்பெறக்கூடாது. புஸ்தகம் வாங்குவதிலும் புஸ்தகம் எழுதுவதிலும், இந்தியர் எழுதிய புஸ்தகங்களைப் பாடமாக வைப்பதிலும் நமது சுதேசாபிமானம் சென்றாலொழிய அது உண்மையான அபிமானமாகாது.

இனி மத்தியநிலையிலுள்ளவர்களின் கதியைப்பற்றிபேசுவோம். ஆங்கிலம் கற்பது அவசியமென்ற எண்ணம் மனதிலுதிப்பதற்கு முன்பு அவரது நிலை மேலானதாக விருந்தது. வீடும், தோட்டமும், விளை நிலமும் உடையவராய் வயிறு பிழைக்கப் பிறரிடம் தொண்டுசெய்ய நிமித்தமற்றுச் சுயர்ச்சியாக விருந்துவந்தனர். நிலத்தில் வந்ததைக்கொண்டு திருப்தியடைந்தனர். ஆங்கில நாகரீகம், கிராமங்களிலும் பரவவே, சர்க்கார் உத்தியோகத்திற்குச் சாதனமான

ஆங்கிலப் படிப்பில் ஈடுபட்டு, அதில் தாம் பாடுபட்டுச் சேமித்து வைத்தபொருளைச் செலவிட்டு அதுவும் போதாமல் தங்களது மனைகளையும் புலங்களையும் ஒத்திவைத்தும் விற்றும் வருவதால், நாளுக்குநாள் அவரது நிலைகுறைந்துகொண்டேவருகிறது. அவருள் பெரும்பாலர் பி. ஏ., எம். ஏ., பி. எல். முதலிய பட்டங்களைத்தேடுவதில் ஏழைகளாகி வயிறு பிழைக்க வழிதேடுவதிலேயே தமது காலத்தைக்கழிக்கின்றனர். தமதுபூர்வநிலைக்குத் தகுதியான சௌகரியத்தை அமைத்துக்கொள்வது அவர்களுக்குப் பெருங்கஷ்டமாகின்றபோது தமது குழந்தைகளை அவர் எவ்வாறுபடிப்பிப்பர்? ஐந்து ஆறு குழந்தைகள் இருந்தால் அனைவரையும் படிப்புக்காகப் பள்ளிக்கனுப்புவது பணக்காரருக்கும் முடியாதன்றோ?

இனி நமது செல்வர்களின் நிலைமையை நிதானிப்போம். செல்வர்களா? நம்மவர்க்குள் அவ்வாறு அழைப்பதற்கேனும் ஒரு சிலர் உளரோ? விசாரிப்போம். நமது பழையமுறைப்படிச் செல்வம் தேடுவது வணிகரது தர்மமாகும். இக்காலத்தும் பிரதேச வணிகரிடமே செல்வம் திரண்டுள்ளது. மேனாட்டார் இந்தியாவில் கால் வைத்தது முதல் நமது வியாபாரமெல்லாம் அன்னோர் கையிற் சிக்கிவிட்டன. நமது வணிகச்செல்வரெல்லாம் நாளடைவில் நசித்துப்போயினர். தற்காலம் சிலர் அன்னியரிடம் தரகு பெற்றுப் பொருள் தேடிப்பிழைப்பினும், அவர் முன்னாளிலிருந்த செல்வருடன் ஒருபடித்தாக வைத்தெண்ணப்படுவாரல்லர். சின்னாள் முன்பு நாடெங்கும் தம் பெயரை முழக்கியோரும் சென்னையிலிருக்கும் பெரிய வீதிகளிரண்டிற்குத் தம் பெயரைத்தந்தருளியோருமாகிய தம்பு செட்டியார், லிங்கிசெட்டியார் போன்ற வணிகர் பெருமக்கள் இப்போது ஏன் இலராயினர்? நந்தமிழ் நூல்கள் வணிகர் திலகர்களை எவ்வளவு மேன்மையாக வருணித்திருக்கின்றன? அவ்வணிகச்செல்வரின் பரம்பரையோர் எங்கே? அவரது வாணிபத்துறைகளெங்கே? முற்காலக் கைத்தொழில்

துறைகள் எல்லாம் எங்கே ஒளிந்தன? இரு நூற்றாண்டுக ளுக்குள்ளாக யாவும் சிதைந்துபோயின என்பதை உணராதார் யாவர்? வியாபாரக்கல்வியே நம்மவரிடம் மறந்துபோய்விட்டதே? அதை மறுபடியும் நமது நாட்டில் நாட்டுவதற்குச் சிலர் முயர்ச்சித்தாலும் அம்முயர்ச்சி பயன்படவில்லையே? ஏன் பயன்பெறும்? தற்காலக்கல்விமுறையைத் திருத்தினாலன்றி அம்முயற்சி பயன் தருமோ? அவ்வாறு திருத்துவது நம்மவரின் கையில் உளதோ?

இனி, இக்காலக்கல்வியின் பயனைப்பற்றிச்சிறிது உசாவுவோம். பலவாறு கஷ்டப்பட்டுக் கடைசியாக பி. ஏ., பி. எல்., எம். ஏ., முதலிய பெரியபட்டங்களைப் பெறுவோரின் கதியை நோக்குங்கள். சில தினங்களுக்குமுன் இருந்தபோர்ட்டர், (Portor) பவல் (Powell) டாக்டர் மில்லர் (Dr. Miller) கோபால்ராவ் (Gopal Rao) முதலிய உபாத்தியாயர் இப்போது அரியாகி விட்டமையால் குரு சிஷ்ய விசுவாசம் குன்றிப்போய்விட்டது தாம் பெறும் பணத்திற்காக ப்போதிப்பதாகப்பல உபாத்தியாயர் கருதுவதால், பிள்ளைகளோடு உறவாடுவதும், தர்க்கிப்பதும், கலாசாலைக்குப்புறம்பே அவருடன் பழகுவதும் இருதிற உபாத்தியாயரிடமுமிப்போது மிகுதியாகவில்லை. பெரிய பட்டங்களைப்பெற்று உத்தம ஞானத்தை அடைந்திருப்பினும் தம்மிலும் அறிவிற்குறைந்த ஆங்கில உபாத்தியாயரை விடத்தாம் ஊதியம் மிகவும் குறைவாகப் பெறுவதாலும் தமது நிலைக்கேற்ப நாகரிகராகக் காணப்படுவதற்குத் தமது சம்பளமெல்லாம் செலவு செய்யவேண்டியிருப்பதாலும் இந்திய உபாத்தியாருக்கு எப்போதும் மனக்கவலை நிறைந்துள்ளது. ஆங்கில உபாத்தியாயர்களோ அரசாட்சி செய்வோரின் கிளையினராதலின், தம் இனத்தாருடனேதான் பழகவேண்டும். பிள்ளைகளுக்கும் அவர்களுக்கும் பள்ளிக்கூடத்திற்கு வெளியே சம்பந்தம் கிடையாது. பள்ளிக்கூடத்திலோ கடினவேலைகளை இந்திய உபாத்தியாயரிடம் சுமற்றி விடுவார்கள். தாம் உயர்குடிப்பிறப்பினராதலின், சம்பளம் அதிகமாகப்பெறவேண்டும்; இந்திய உபாத்தியாயரோ அவரது ஆயுள்

முடிவிலும் ஆங்கிலரது தொடக்கச்சம்பளமே பெறவேண்டும். அதாவது ஆங்கில உபாத்தியாயரது சம்பளம் ரூ 500 இல் தொடங்கி மேன்மேலும் விருத்தியாகவேண்டும். இந்திய உபாத்தியாயரது சம்பளம் ரூ 50இல் தொடங்கி ரூ 500 வரைமட்டுமே செல்லவேண்டும். இந்த உபகாரத்தையும் பெரும்பாலார் அடைவதில்லை. சர்க்கார் பாடசாலைகளே இவ்வாறு வர்ணவேற்றுமையை வற்புறுத்தி அதை நிலைபெறச்செய்யும்போது, இதரப் பள்ளிக்கூடங்களைப்பற்றிப் புகலவேண்டாம். அவை எல்லாவற்றிலும் யாதேனுமொரு கொடுமை காணப்பட்டு ஆசிரியரின் மனவமைதியைக்கெடுக்கின்றது. ஆதலின் எங்கு நோக்கினும் தற்காலப்படிப்பு முறையில் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் மனவொப்புமை கிடையாது. இதனால் மாணவர் பாடங்கேட்டுப் பரீட்சை தேறுவதொன்றே தமது கடமையென நினைத்து, அதன் மேலேயே குறிவைத்துத்தமது தேகதிடத்தையும் பாராட்டாமல் தம்முழுமனதையும் அதில் செலுத்திவருகின்றனர். தமது பாடசாலை என்றால் அவரிடம் யாதொரு உற்சாகமும் மனதில் எழுகிறதில்லை. பரீட்சை தேற்றுவிக்கும் யந்திரமெனத்தமது பாடசாலையைக்கருதுவர். தமது ஆசிரியரெல்லாம் அவ்வியந்திரத்தை யோட்டும் யாந்திரிகரெனவும தாமே அந்த யந்திரத்தில் அகப்பட்டு வெளியேறும் சரக்குகளெனவும் பாவிப்பர். சரக்குகளையெல்லாம் யாந்திரிகர் ஒரேமாதிரியாகத்தானே பதன்செய்வார்கள்? ஏற்ற வித்தியாசங்கள் அம்முறையில் எதற்காகக்காண்பிக்கவேண்டும்? அதுபோலவே நமது பாடசாலைகளிலும் பரீட்சை தேறுவதொன்றையே குறியாகவைதது, அதற்கு வேண்டியவைகளை நடத்துவதில் பிள்ளைகளின் மனோபாவங்களையும் பருவமுதிர்ச்சியையும் சரீரசக்தியையும் சிறிதும் கவனியாமல் எல்லார்க்கும் ஒருபடித்தாகவே போதனமுறையையும்பாடப்புஸ்தகங்களையும் அமைத்துத் தாம் எதிர்பார்த்த பயனைப்பெறாது திசைதப்பிய மீகான் போல ஆசிரியர் தயங்குவர். இதன் பயனாகப் பல மாணவா நோக்கம் யாதொன்றுமின்றிப்ப

யின்று, பின்னர்ப் பிழைக்க வழிதெரியாது விழிப்பர். பலர் பாதிவழியில் கதிகலங்கி மதிமயங்கிப் படிப்பை விட்டுப் பரிதபித்து ஏங்குவர். பலர் கைப்பொருளைப் பறிகொடுத்து உயிர்ப் பிணமென யாவரும் இகழ வானத்தைப் பார்த்து "ஜலந்தன்னில் மீனைநம்பி வம்புறு விடக்கை விட்ட" நரி போல் ஏக்கமுறுவர். இவ்வாறாகத் தற்காலக் கல்வித் துறையைத் தாண்ட நினைத்தோரெல்லோரும் படாதபாடுகள் படுவதால், 'அவ்வாற்றின் கரைநின்று வெள்ளத்தைக் கண்டஞ்சினோர் பலர். அவ்வாற்றின் சுழி வாய்ப்பட்டும், வெள்ளத்தில் ஈர்க்கப்பட்டும் தத்தளித்தோர்பலர். இறங்கிய துறையிலேயே வீழ்த்தி ஒதுக்கப்பட்டோரும் பலர். பலர் நோயாகிய முதலையின் வாய்ப்பட்டு மாய்ந்தனர். சிலரே அக்கரைகண்டவராவர். அவரும் தாம் அரிதிற்கண்ட விஷயங்களின் பயனையடையாது, பிறர்க்கும் பயன்படாது மெய்வலிகுன்றி, இளம்பிராயத்திலேயே கேளிரும் மனைவியும் அலறக் காலன்வசப்படுவார். இவ்வாறு பலவாறாக இந்நாளிலுள்ள கல்விமுறை மாணவர்க்கு இன்னல் விளைத்து அவரது ஆயுளைத்தேய்க்கும் அரமாகவுள்ளது.

இனித்தற்கால முறையில் மாணவர் படிக்கும் பாடங்களின் பயனைக்குறித்து ஆராய்வோம். பாடவிஷயங்களுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தா சம்பந்தம் கிடையாது. அவைகளைப் படிப்பதால் இந்தியர் இதுகாறும் தாம் செய்து வந்த காரியங்களைச் சிறக்கச் செய்தாரென்பதில்லை. உலக வழக்கிற்கும் புஸ்தகப்படிப்பிற்கும் எள்ளளவுந் தொடர்பு கிடையாது. ஏட்டுச்சுரை கறிக்குதவாதவாறு போல, இந்தியர் படிக்கும் படிப்பெல்லாம் பள்ளிக்குப் புறம்பே யாதொரு பயனையும் தருவதில்லை. பிறர்க்கும் அவர் மூலமாக ஒரு பலனுங் கிட்டுவதில்லை. தமது குல வித்தைகளையும் மறந்து கரையிலிட்ட கழிமீன்போல மதிமயங்கித் துன்புறுவர், சர்க்கார்வேலை, உபாத்தியாயம், வைத்தியம், நியாயவாதம் முதலிய சில துறைகளின் கதவுகளே இவர்க்குத் திறக்கப்பட்டுள்ளன. இவர் படித்தோ

ராயினும் படியாதவர்க்கும் இவர்க்கும் வித்தியாசம் கிடையாது. பள்ளியில் ஆங்கில பாஷைமூலம் கல்விபயின்று வந்தாலும், என்ன கஷ்டப்பட்டும் இவர்க்கு ஆங்கில பாஷையில் தேர்ச்சி அடைவது கூடாததாகின்றது. தமது தேசபாஷையின் ஞானமோ இவர்க்குச் சிறிதும் கைகூடுவதில்லை. சுயபாஷையை நன்றாய்ப் பயின்றாலல்லவா அவர்க்கு அதில் ஞான மேற்படும்? இவ்விதம் தற்காலக் கல்விமுறையின் பயனாக இவர்க்கு ஒருபாஷையிலேனும் ஞானம் நிரம்புகிறதில்லை. இரண்டுங்கெட்டு திரிசங்கு சுவர்க்கவாசியாகித் தயங்குவர். ஆங்கிலம் கற்பதற்குச் செலவழித்த வருஷங்களைத் தேச பாஷை கற்பதில் செலவிட்டால் நமது கற்றறிந்த மாணவரின் பெருமை எவ்வாறிருக்கும்? தமது வாழ்க்கையில் யாதொரு பயனையுங் கொடாதவையும், பரீக்ஷை முடிந்தபின்னர்ச் சடுதியில் மறந்து போவனவும், கனவிலும் தம்மால் பின்னாளில் நினையாதனவுமான பாடங்களில் தம்முழுமனதையும் செலுத்தி, அவைதம்மனதிற் பதியாத போதிலும் அவற்றை புஸ்தகங்களிலுள்ளவாறு மனப்பாடம்செய்து பரீக்ஷை சமயத்தில் உபயோகப்படுத்துவதில் அவர் எடுக்கும் முயற்சிக் களவுண்டோ? அதில் ஒரு சிறு பாகத்தைத் தம் சுதேசபாஷையிலாவது அல்லது தம் சுதேசபாஷைமூலமாக பிறபாஷைகளில் எழுதப்பட்ட நூல்களிலுள்ள விஷயங்களைப் பயில்வதிலாவது செலவிட்டால் எவ்வித மேலானபதவியை அவர் பெறுவார்! எவ்வித உன்னத நிலையை நமது நாடும் விரைவிற் பெறும்!

இன்னும் தற்காலக் கல்விமுறையில் சுதேசாபிமானம் என்பது நம்மனதில் சிறிதும் நுழைவதில்லை. சுதேசப் படிப்பு கீழ்மையானது; சுதேசபாஷைகள் பயனற்றவை; சுதேசக் கொள்கைகள் நடைபாவனைகள் இழிவுள்ளவை; சுதேசசரித்திரம் சூனியமானது, சுவையற்றது; சுதேச பூர்வாசாரங்கள் வெறுக்கத்தகுந்தவை; சுதேச நாகரீகம் மிகவும் புன்மையானது; மேனாட்டுநாகரீகமும் மேனாட்டுக் கல்விமுறைகளும், சாஸ்திரக் கொள்கைகளும் இந்தியாவில் பதவானது அநுளால் வந்து பயின்றிராவிடில் இந்தியாவுக்

குப் பிரளயகாலம் சப்பவித்து நாமும் அழிந்திருப்போம்; இவ்விதக் கடுந்துயரினின்றும் மேனாட்டார் நம்மைக்காப்பாற்றியதற்காக நமது நன்றியறிதலை அவர்க்குத்தினந்தோறும் காட்டவேண்டும்; என்று பலவாறுகப் பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இதனால் நம்மவருள் அநேகர் தமது கொள்கைகளைக் கைவிட்டு, ஆங்கிலாது நடையுடை பாவனைகளைக் கையாண்டு வருகின்றனர். இத்திடனமையாது தாம்மேலோரானதாகப் பாவித்து அகந்தைகொள்கின்றனர். ஆங்கிலரோ இன்னோர் இவ்வாறு தம்மைப் போலாக வேண்டுமெனத் தம் நடைகளைக் கையாளுவதற்காக அவரை இகழ்கின்றனர். இவரை இவாது இனத்தாரும் இகழ்கின்றனர். இவ்வண்ணம் இவர்க்கு இங்கும் திரிசங்கு சுவர்க்கம் கிடைக்கின்றது. இவரினும் பாக்கியசாலிகள் யாவருளர்?

இவ்விதப் பயனற்ற படிப்புமுறையைக் கையாண்டு அதிற் கைவந்த சுதேசவித்வான்களும், நமது நாகரிகத்திலும் நாட்டின் பெருமையிலும் மதிப்புக்கொள்ளாத பரதேச கனவான்களும் நமது கல்வி முறையை ஒழுங்குபடுத்த நினைத்தால் அது எவ்வாறு நிறைவேறும்? தாம் கண்டவாறு தானே அவர் திருத்தஞ் செய்ய முயலுவர்! தாம் கொண்ட கொள்கைகளை நிலைபெறச் செய்வது தானே அவர்களுக்குத் திருப்தியை விளைவிக்கும்?

இத்துணையும் கூறியவாற்றால் தற்காலம் நம்மிடமுள்ள கல்விமுறை பொருட்செலவைப் பெரிதே வேண்டுவதென்பதும், பெரும்பாலார்க்கு எட்டாததாக வுள்ளதென்பதும், அவ்வாறு அதில் முயன்று தேறியோர்க்கு முயற்சிக்குத் தகுந்த பயனையளிக்கச் சக்தியற்றதாகவுள்ள தென்பதும், சரீரத்தளர்ச்சிக்கும் ஆயுள்குறைவிற்கும் நாட்டின் எளிமைக்கும் காரணமாகவுள்ள தென்பதும், கற்பவர்க்குப் பொருள் வருவாய்க்கான மார்க்கங்களைக் காட்டச் செயலற்ற தென்பதும், பயனற்றவைகளைப் போற்றச் செய்

கின்றதென்பதும், ஆத்மாவின் விகாசத்திற்கு இடையூறாக வுள்ளதென்பதும், நம்மவருள் போட்டிக்கும் பெருமிதத் திற்கும் காரணமாகவுள்ள தென்பதும், தேசபக்தியும் தேச பாஷைகளும் வளர்வதற்குத் தடையாகவுள்ள தென்பதும் விளங்கலாகும். இனி சுதேசக்கல்வி என்பதின் பொருளை யும் பெருமையையும் பற்றி ஆராய்வோம்.

ஆர். ரெங்காசாரியார் எம். ஏ, எல். டி.

ஜகத்குரு ஸ்தோத்திரம்.

'மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம்'

பாவித்தேன் என்ற மெட்டு.

வெள்ளி யம்பலத் துள்ள தேவனே மேவிலே சூழுல கின்தணே
உள்ள மாமதம் யாவி னுக்குமோ ருயர்பெ ரும்மதி காரியே!
உள்ள தாலவ சியம தாகவே உம்முடையவோர் வரவுதான்
உள்ள மோடுமை நோக்கு வார்க்கரு ளுதவ வேயிவண் வரு
குவீர். (1)

சண்டை யைமனம் கொண்ட லைந்திடுந் தன்மை மேவுச
கோதரர்
கொண்ட எண்ணினை விட்டி டும்படி யாக வும்மொடு கூட்
டமாய்க்
கண்டு நண்பினைக் கொண்டு வாழவும், கருதியேயுமை நோக்
கிடும்
தொண்டர் மாமகிழ் கொள்ள வும்மிவண் தோன்ற வேவரு
வீரரோ. (2)

நாளு மாகிடுஞ் செலவை யாவரே நாட வல்லவர்? நாதனே!
மாளு வார்களைக் கோத வல்லவர் மண்ணில் யாவரோ? வா
னவா!
மூளு மாபகை நீங்கியன்னவர் முன்ன மெவ்வண மவ்வணம்
ஆளு மாறருள் செய்ய வேயிவண் ஆதி யேவரு வீரரோ. (3)

பொருளி னாசையாம் மருள்கொடேயலைப்போதம் நல்வழிப்
போதவும்,
இருளு லாமனத் தருளி லாதவர்க் கேற்ற யாவுமி யம்பவும்
தெருள லாதொரு பொருளு மில்லையாற் றேட என்பது
செப்பவும்
அருளு லாமனத் தைய னேயிவண் அருள வேவரு வீர
ரோ. (4)

ஈச னேநமக் கேற்ற தந்தையென் றெண்ண வும்,மவர்க்
கியாமெலாம்
ஆசை நன்மகா ராகு வம்மென அறிய வும்,மறி யாமையால்
நாச காரண மாகு மாப்பகை நாடல் போக்கவும் நாடியே
பேசிவாரிலை யாத லாலெமைப் பேண வேவரு வீரரோ. (5)

A. R. ஸ்ரீனிவாச முதலியார்

ஜகத்குரு ஸ்தோத்திரம்.

திருப்புகழ். எண் கலை வண்ணம். ஆதிதாளம்.

தனத் தனத் தன தன தானதன தனதான.

நிலத் தடத் துறு பல சாரார் கவி
மதத் துயிர்தரு மறையோனேஎம
தகத் தடத் திருள் களைவாயே அதி உறைவாயே

நிலைத்த மெய்ப்புக லருளாளா மதி
கலக்குமிப் பல வித வேதா கமர்
பலர்க்குமப் பொருள் பசர்வோனே சமர் களைவோனே.

புலத்தெதிர் படு மறிவாலேயொரு
பொருட்டுணிந்துரை புவிசாரதனை
மனத் தகத்திட வருவாயே அருள் புரிவாயே.

புடைத்தெழுந்திரை கடலாடைகொளு
நிலத் தொடுஞ்சுரர் முதலானோர்பணி
குணத் தமர் பெருங் குருவானு யருட் பெருமானாய்.

நலத்துறும் உயர் குணமாருதிமம்
நிகர்த்ததெள்ளிய மனதாலேநித
மிகுத்தவன் பொடுமறவாமேயுனை யுறுவோமே.

நகைத்து மெல்லென சிறுவாயாலசை
மலர்க் கரத்தொடு மகிழ்வாலேவரு
மகற்கிடர்தா நினையோமே தின மறவாமே.

மலைத்தலைப்புறு மதிபோலேதிகழ்
மனத்தகத்துறு பெரியோனே புகழ்
குணத்திறத்துக எமைநீயேஎன இசைவோமே.

வளர்பிறைத்தனி மதிபோலேகுண
நலத்தொடும்வளர் குழுவானேமென
பணிச்செயும் ஒரு வழியாலேகுரு பெருமானே.

அ. நம்மாழ்வார்,

உபாத்தியாயர், தியஸாபிகல் ஸ்கூல், சோ. குப்பம்.

ஸ்ரீ "அன்னீ பெஸண்ட்" அம்மாளின்

71-வது ஜனனதினக் கொண்டாட்டம் 1—10—17.

கும்பகோணம்.

ஓதநெடும் "அட்லாண்டிக்" திரைகெழுமும் "அபர்லாண்டு"
த்வீபமோங்க
மேதகமு நற்குணமும் வியனுறுவித் தகமுடனே
மெய்ம்மையாதி
சாதகமாம் பற் குணமு வடிவெடுத் தாங்குறச்சனித்துத்
தவழ்ந்திருந்து
கோதறவே நடந்துவளர்ந் தமைப்பருவத் தரியகலை
பலவுங்கோடி 1.

அரிவையெனும் பருவமுற அன்பின்மிகு "பெஸண்ட்"
என்னும் வரனைவேட்டுப்
பெருமைசெறி யில்லாற்றில் வழுவறநின் றொழுகியிரு
மகப்பேறெய்தி
உறுதியுறு வாய்மைநெறி யுய்க்குமத மெம்மதமென்
றுலகினாய்ந்துச்
சாதமத மித்துமத மெனுமுண்மை தன்னிதயத்
தூற்றனான்றே 2.

வேதமுத லுபநிடத மிதிகாசங் கலைபலவுந்
தந்தம்மேலோர்
போதநெறி யாய்ந்துணரும் புண்ணியர்வாழ்
புராதனமா மிந்துபூமி
பூதலத்திற் புகழுடைத்தென் றீரோப்பைப்
புறக்கணித்தே இந்துபோந்து
ஓதவரும் பிரம்மமய ஞானசபை யங்கத்தி
லோர்மாதாகி 3.

சவைத்தலைமை "ஆல்க்காட்டு" மாமுனியுந்
தன்னுரிமை விண்ணாடேகச்

சுவைச்சொல் "பெஸண்டம்மை" யையே தலைமைபெறத்
தக்கனென அவையோர் சொற்றார்.

நவைக்குறிய குணமின்றி நற்குணமே யோருருவாய்
நம்மனோர் செய்

தவப்பயனீ தென்றுலகர் சாற்ற அவள் சபையைநாள்
வளர்த்து வந்தாள். 4.

இமயமலை பிறந்துலகஞ் செழிப்ப வளந் தருகங்கை
யிரையுங் காசித்

தமிநகரி லாங்கிலமு வடமொழியும் பிறமொழியுஞ்
சாற்றுஞ் சாலை

சமையுவணம் பங்நிதிசேர்த் துயர்கலையுஞ்
சநா தனமுந் தந்தாளாங்கு

கமலையுடன் விமலையுநற் கலைமகளும் புரிநடனம்
காண்பீர் மன்னே. 5.

பன்னாளாய் ஞானசபை கலைவளரப்பாடுபடு
மருமைமாது

சின்னாளா யிந்தியருக் கரசுரிமை சேரலற
நெறியென் றுன்னி

முன்னாளி லெவருமிவட் கிணையாக மொழியானு
மெழுத்தினானுஞ்

சொன்னார்களிலையென்ன "ஹோம்ரூல்" வேட்டுபொறி
சொற்போற்கொண்டாள. 6.

இப்பரதங் கண்டஞ்செய் யருந்தவத்தின்
குறையோ மற்றில்லையாயின்

முற்பிறப்பி லிந்தியர்செய் முறைபிறழ்ந்த
நோன்பினது முயற்சியாலோ

செப்பரிய சுயவரசு மிந்தியர்க்குறுவது
முன்னோ சேணோ

எப்படியோ வெனவுலக மிறைவரவட்
டணிவாசஞ் செய்வித்தாரே. 7.

* கள்ளுருகு மலர் † நீலக் கன்மேல் ‡ கீழ்மா திருக்கக்
கண்ட கேட்ட

|| வள்ளுருக மண்ணுருக மரமுருக மாவுருக
மலை தானுருக

முள்ளுருக புள்ளுருக × முருடுருக முறையறியா
"மெயில்" அன்ட் "ஜஸ்டிஸ்"

உள்ளுருகும் வகையிலையே யந்தோயே
னவைபிறந்த வுலகின் கண்ணே. 8.

மும்மதியா யிவ்வுலகமெடுத்த விடா முயற்சியதின்
பயனைத் தோன்ற

செம்மலருட் சித்திபெறச் சிறைநீங்கி வெளியானாள்
சென்னை சேர்ந்தாள்.

பொம்மல்மிகு நகருலாவின் வைபவத்தைப்
புத்தேளிர் புகழாராயின்

எம்மன ராலியப்பவலி தெனு மாற்ற
மெவற்றானு மிகழற்பாற்றே. 9.

இத்தகைய பெருமாட்டி யிற்றைநாளேழுபத்
தாண்டின் முன்னர்

பத்தினியாந் தாயுதரத்தினி னிழிந்தாள்.
பரவை சூழுலகோர் போற்ற

தத்துதிரை மண்ணுலகி லின்னமும் பல்லாண்டு
சுகந் தழைத்துழைத்துக்

கத்தனருளா "லோம்ரூல்" கனிச்சுவையை
யாமருந்தக் களிப்பாள் கண்டே. 10.

த. கணபதி பிள்ளை,
கும்பகோணம்.

---

* கள்ளுருகுமலர் = தேன் ஒழுகும்படியான புஷ்பங்கள் நிறைந்த
† நீலக்கன்மேல் = நீலகிரி மேலும் || வள் = வாளாயுதம்
‡ கீழ் = அதனடிவாரமாகிய கோயமுத்தூரிலும் × முருடு = விறகு

ஒரு கதை.

198—ஆம் பக்கத் தொடர்ச்சி.

தாத்தா:—மரத்தினடியில் ரிஷி வீற்றிருந்ததையும், அவரைச்சுற்றிக் கொஞ்சம் தள்ளி ஸ்திரீ ரத்தினங்கள் அழகாய் உட்கார்ந்து க்ஷாந்திவாதியின் வார்த்தைகளை ஆவலுடனும் பக்தி சிரத்தையுடனும் செவி சாய்த்துக் கேட்டுக்கொண்டிருப்பதை அரசன் பார்த்தவுடன் அவன் மனதில் கெட்ட எண்ணங்கள் தான் உதித்தன. தன்னுடைய ஸ்திரீகள் தனக்கு எப்படி ஆசைக்கு உரித்தானவர்களாக இருந்தனரோ அம்மாதிரியே அந்த ரிஷியும் அவர்களைப்பார்ப்பதாக எண்ணினான். கண் தீப்பொறி பறக்க, மீசை துடிதுடிக்க, முகம்வியர்க்க, பரபரக்க ஓடிவந்தான். உறையிலிருந்து கத்தியை உருவினான். ஸாது வேடந்தரித்து மோசமாக ஸ்திரீ லோலனாயிருக்கும் இந்தப் பயலைக்கொன்று விடுகிறேன், என்று தீர்மானங்கொண்டு க்ஷாந்திவாதியை நோக்கி "அடே ஆஷாடபூதி, என்மனைவிகளைக் கண்ணால் பார்க்கலாச்சா? துஷ்டா! உனக்குத் தகுந்த சிக்ஷை செய்கிறேன்" என்று கதறினான். இதற்குள் அரசனுடைய பரிவாரங்கள் ஓடிவந்து அரசனை எச்சரித்தார்கள்.

பரிவாரங்கள்:—அரசே, இவர் க்ஷாந்திவாதியல்லவா? நீண்ட தபசு புரிந்து இந்திரியங்களை ஜயித்த பரமபுருஷனல்லவா? இவர் ஒரு கல்மஷமுமல்லாத பரமசாந்தரே! மாசற்ற தூமணியிவர். களங்கமற்ற சந்திரனிவர். இவரைக் கடிவது பெரும்பாவமே.

தாத்தா:—இவ்விதமாகப் பரிவாரங்கள் வணக்கமாய்த் தெரிவித்தார்கள். அரசனுடைய ஆரவாரத்தைக் கேட்ட அவன் பத்தினிமார் திடுக்கிட்டு சரேல் என எழுந்து, ஆச்சரியமடைந்து, பரபரப்பிற்கும், கோபத்திற்கும், காரணமறியாமல் திகைத்து நின்றார்கள். பரிவாரங்கள் சொன்ன வார்த்தைகள் அரசன் காதில் விழவில்லை. "இந்த அயோக்-

கியனே, தவசிவேஷம்பூண்டு மோசம் செய்யும் அக்கிரமனை சிக்ஷை செய்தால் தான் உலகம் க்ஷேமம் அடையும்” என்று சொல்லிக்கொண்டு கோபமாய் கத்தியை ஓங்கி க்ஷாந்தி வாதியை வெட்டிவிட எண்ணங்கொண்டு அரசன் ஓடிவருகிறான். இதற்குள் அரசன் மனைவிமார் உண்மையை ஒருவாறு அறிந்து அரசன் காலில் விழுந்து கெஞ்சிப்பின் வருமாறு வேண்டினார்கள். மனைவிமார் “நாதா! பொறுக்கவேண்டும். இவர் பெரிய மஹான். உத்தமர். கோபங்கொள்ளலாகாது. இவர்பெரிய தவசி. யாதொரு குற்றமுமற்றவர். புண்ணியனை ஹிம்சிக்கலாகாது. கொடிய பாபம் சம்பவிக்கும் நம்முடைய குடும்பம் முற்று மழிந்துவிடும்.” இவ்விதம் மன்றாடியும் அரசன் கவனிக்கவில்லை. ஆனால் உருவின கத்தியுடன் க்ஷாந்திவாதி முன் அரசன் நிற்கையிலும், அவருக்கு பயமாவது கலக்கமாவது உண்டாகவில்லை. முகம் நிர்மலமாயும் அமைதியாயும் இருந்தது. ரிஷி கோபம் கொள்ளாமலிருந்ததைப்பார்த்து அரசனுக்குக் கோபம் அதிகரித்தது.

அரசன்:—இப்படி எல்லாம் இருந்தால் நான் இவனைப் பெரியவர் என்று எண்ணி விட்டுவிடுவேன் என்று இந்த மோசக்காரன் எண்ணியிருக்கிறான். (அவ்வரசனைப் பார்த்து க்ஷாந்திவாதி குளிர்ந்த வார்த்தைகளைக் கூறினார்)

க்ஷாந்திவாதி:—அரசே! இந்த இடமானது என்னுடைய ஆசிரமம். தாங்களோ எம்போலியரைக் காக்கும் அரசன். தங்களுக்கு நான் அரசனுக்குரிய மரியாதையைச் செய்யவேண்டியிருக்கிறது. அந்த மரியாதைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆசனத்தில் அமருங்கள். என்னகோபம் தங்களுக்கு? அரசனுக்குக் கோபம்வரலாகாதே! (அரசன் கொஞ்சமும் கவனிக்காமல் கோபாவேசம் கொண்டு கையை ஓங்கிக்கொண்டு நிற்கிறான்.) தங்கள் மனைவிகள் இங்குவந்தது நான் கூப்பிட்டு அல்ல. அவர்களாகவே வந்து எங்களுக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று கேட்டதால் நான் சில வார்த்தைகள் சொன்னேன். அதுவும் என்குற்

றமா? அவர்கள் என் வார்த்தைகளைக் கேட்டதால் யா தொரு தீங்கும் அடையவில்லை. என்னிடத்தில் கோபம் கொள்ள யாதொரு காரணமும் இல்லை. (என்று அமைதி யாய்ச் சொல்ல)

அரசன்:—நீர்தான் க்ஷாந்திவாதியென்று சொல்லிக் கொள்ளுகிறீரே. உமக்குப் பொறுமையிருந்தால், நீர் உண் மையான ரிஷியாயிருந்தால், உமக்கு உயிரின் பேரில் இவ் வளவு பற்று எதற்காக? ஏன் இவ்வளவு பயந்து உயிருக் காகக் கெஞ்சுகிறீர்?

க்ஷாந்திவாதி:—“அரசே! எனக்காகவல்ல நான் நல்ல வார்த்தைசொல்லுவது. தங்களுடைய க்ஷேமத்தைக் கோரி யே தான். என்னை ஹத்தி செய்தால் தங்களுடைய கியாதி யும் பெருமையும் போய், தங்களை பாவமும் பழியும் சூழு மே என்று பரிதாபம் கொண்டுதான் சொல்லுகிறேன்.

தாத்தா:—இதைக்கேட்டவுடன் அரசனுக்குக் கோபம் அதிகரித்து ஒரேவெட்டாக க்ஷாந்திவாதியின் ஒருகையைத் துணித்து விட்டான். அரசனது பத்தினிகளும், பரிவாரங் களும் ஹா! ஹா! கஷ்டம்! கஷ்டம்! என்று அலறினார்கள். இருந்தாலும் அவர்கள் என்ன செய்வார்கள். அரசனல்ல வா இவன்! இவனைத்தடுக்க அவர்களால் முடியுமா? ஆனால் க்ஷாந்திவாதி மாத்திரம் முகம் சுளிக்கவில்லை. அரசனைச் சபிக்கவில்லை. கருணை நிறைந்த கண்களால் அரசனைக் கண் ணுற்று அவனுக்கு நேரும் பழிக்கும் பாவத்துக்கும் பரித பித்து யாதொன்றும் சொல்வதில் பயனில்லையென்று கருதி சும்மா இருந்துவிட்டார். ஆனால் இந்த மஹானுடைய பொறுமையே அரசனுடைய கோபத்துக்குத் தூண்டுகோலா ய்விட்டது. கோபாக்கிராந்தனாய் க்ஷாந்திவாதியின் மற் றொரு கையையும் கால்களையும் கத்தியால் சிதைத்துவிட்டு திரும்பிக்கோபமாய்த் தோட்டத்தை விட்டுபுறப்பட்டான். ஆனால் இந்த அநியாயத்தை அப்பாமன் பொறுத்தாலும்

பூமாதேவி பொறுப்பாளா? உலகம் சஹிக்குமா? உடனே திடீரெனப் பூமிவெடித்தது. பூமியிலிருந்து ஒரு ஜ்வாலை கிளம்பி அரசனை உட்கொண்டது. அரசனும் பூமிக்குள் மறைந்தான். அரசனது பரிவாரங்களும் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றவர்கள் சிதைவுண்டு கிடக்கும் க்ஷாந்திவாதியின் அருகில் சென்று அவரை வணங்கிப் போற்றி வேண்டினார்கள். "ஸ்வாமி! கோபம் கொள்ளாமலிருக்கவேண்டும். நாங்கள் ஒன்றும் அறியாதவர்கள். இக்கொடிய அரசன் செய்தது கொடும் அபராகம். ஆயினும் அதற்கு நாங்களென்ன செய்வோம். எங்களைச்சபிக்கலாகாது. தாங்கள் கோபம்கொண்டால் உலகமே எரிந்து போகும். என்று பலவாறு கெஞ்சினார்கள். அதற்கு க்ஷாந்திவாதி "குழந்தைகளே! நீங்கள் வருந்தாதீர்கள்! அரசன் அடையும் பாபத்துக்காக வருந்துகிறேனே யொழிய எனக்குக்கோபம் இல்லை. அவன் இக்கொடுமையால் இகத்திலும் பரத்திலும் கஷ்டப்படுவானே என்று எனக்குப்பரிதாபம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் வருந்துகிறேன். நீங்கள் கவலைப்படாமல் போங்கள். பிறந்தவன் சாவது நிச்சயம். இந்தமுறை இவ்விதம் உடலை நீக்கவேண்டியது போலும். ஆதலால் யாதொரு வருத்தமும் இல்லை. நீங்கள் சுகமே வீடுசெல்லுங்கள்." என்று சொல்லி தன்உடலை நீத்தார்.

வேங்கடராமன்:—பாபம்! நல்ல ரிஷிக்கு இப்படியா கஷ்டம் வரவேண்டும். எவ்வளவு வலி வலித்திருக்கவேண்டும்! ரொம்ப கஷ்டப்பட்டிருப்பார்!

ஜானகி:—என்ன ராஜா அவன்! இப்படியும் ஒரு கோபமா! தன்னை அறியாமல் அடக்கமுடியாமலா கோபம் வரும்? ஒருவனைக் கொன்று விடுவது என்றால் இலேசா? உயிரைக் கொடுக்க முடியுமா என்ன முயன்றாலும்? இவன் ராஜாவில்லை. ஒரு ராக்ஷஸனாக இருந்திருக்கவேணும்!

கோமதி:—அதிருக்கட்டும். அவன் மனைவிகள் எல்லாம் என்ன பார்த்தால் கூட பறந்து போய் விடுவார்களா? அவர்கள் என்ன கர்ப்பூரமா காற்றுக்கொண்டு போக? இவ்வளவு கோபம் கொள்ள யாதொரு காரணமும் காணுமே? ரிஷியோ மிகவும் பெரியவராயிற்றே. அவரைப் பார்த்ததும் அரசனுக்கு நல்ல புத்தி வரவில்லையா? அவன் மனமென்ன கல்லா? அல்லது அவன் என்ன புலியா?

மீனாக்ஷி:—யாராயிருந்தாலென்ன, அவர்கள் கர்மத்தின் பலனை அனுபவித்துத் தான் தீரவேண்டும். இல்லையா தாத்தா இந்த மகான்கூட முன் பிறப்பில் ஏதாவது பிழை செய்திருப்பார். அதன் பயனை இக்கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி வந்தது என்று நினைக்கிறேன். ஆனால் கஷ்டத்தை என்ன பொறுமையாய் அனுபவித்தார்! அது ஆச்சரிமாயிருக்கிறது. நம்முடைய காலில் ஒரு சிறு கல் தாக்கினால் எவ்வளவு கோபமும் தாபமும் வருகிறது!

சுந்தரம்:— ஆமா. ஒருநாள் தெருவில் சினேகிதர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு வயது முதிர்ந்த ஒருவர் நடந்து போய்க் கொண்டிருந்தார். கால் விரலில் ரஸ்தாவில் இருந்த கல் பட்டு கொஞ்சம் ரத்தம்வந்தது. அவர் கோபத்தைப் பார்க்கவேணுமே! முனிசிபாலிட்டியை வைதார். எதிரே வந்தவர்களையெல்லாம் வைதார். நாங்கள் எல்லாரும் கூக்குரலிட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். எங்களைக்கடிந்தார். அடே! அப்பா! நாங்கள் எல்லோரும் அவர் கோபத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம்.

தாத்தா:—குழந்தைகளே. கவனியுங்கள். ஒவ்வொருவருக்கும் கஷ்டங்கள் வருவது கர்மத்தின் பலன் தான். ஆனால் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளும் விதம் தான் மனிதனுடைய பக்குவத்தைக் காட்டுகிறது. இவர் மிகவும் சாந்தரானதால் ஒருவரையும் கோபியாமல் சகித்துக்கொண்டிருந்தார். புதிதாக கர்மத்தையும், பாசத்தையும், சம்பாதிக்கவில்லை. அரசனைக் கோபித்தால் என்ன பிரயோஜனம்!

இருவருக்கும் புதிதான வெறுப்பு ஏற்பட்டு மறுபடியும் அதன் பயனை அனுபவிக்கவேண்டிவரும். மீனாக்ஷி சொன்னது நிரம்ப சரி. க்ஷாந்திவாதி வாழ்நாள் எல்லாம் தன் பெருமையைக்காட்டினார். இறந்த சமயத்திலும் தன் மேன்மையை நன்றாய்க்காட்டினார். அதனாலேயே அவர் வெகு உன்னத பதவியை அடைந்தவர் என்று நாம் அறியவேண்டியது. அரசன் நல்ல ஸ்திதியிலிருந்தாலும் அவனுடைய குணத்தைப் பார்த்தீர்களா? அவன் தான் என்ற கர்வத்தால் நிறைந்தவன். உலகமெல்லாம் தனக்காகவே ஏற்பட்டது என்ற எண்ணங்கொண்டவன். தன்னைவிட உயர்ந்த எண்ணங்கொண்டவர்கள் இருப்பார்கள் என்று கூடத் தெரியவில்லை. பாருங்கள்!

மீனாக்ஷி:—ஆமாம். அவன் மனைவிமாரைக் கல்யாணம் செய்துகொண்டது கூட அவர்கள்மேல் அன்புகொண்டா? தனக்கு பரிசாரகம் செய்து தன்னுடையசுகத்தை அதிகரிக்கிறதற்காகத்தானே. பத்தினிகளைக் காணாத போது என்ன கோபம் வந்தது பார்த்தீர்களா? தாத்தா! அதிலும் அவன் எந்த எண்ணங்கொண்டு மனைவிகளைப் பார்த்தானோ அம்மாதிரியே தான் ரிஷியையும் நினைத்தான். பாருங்கள், தாத்தா அவன் என்ன அல்பன்! பாபி! ஆனால் தாத்தா, இவன் எப்படி அரசனாகப்பிறந்தான்? அரசனாய்ப்பிறப்பவன் உயர்ந்த குணத்தையுடையவனாக விருந்தால் தானே நியாயம்?

தாத்தா:—இதன் விவரங்கள் நம்மைப் போன்றவர்களுக்கு எப்படித் தெரியும்? திரிகாலக்ஞானிகளாகிய தபஸ்விகளுக்குத் தான்தெரியும். கர்மதேவர்கள் ஒவ்வொருவனுக்கும் அவன் கர்மங்களுக்குத் தகுந்த பதவிகளைக் கொடுக்கிறார்கள். முற்பிறப்பில் ஏதோ நல்ல புண்யம் பண்ணியிருந்தான். ஆகையால் அவன் உலகவழியில் உயர்ந்த பதவியில் பிறந்தான். ஆனால் அவன் ஜீவனுடைய ஆயுட்பிரமாணத்தால் பார்த்தால் மிகச்சிறியவன்.

ஜானகி:—ஆனால், தாத்தா! இந்தக் கதையைக் கேட்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. நல்லவர்களுக்கு இத்தகைய தீங்கு நேரிட்டது என்றால் நல்லவர்களாயிருக்க ஒருவரும் முயற்சி செய்யமாட்டார்களே. நல்லவராகயிருந்ததற்கு இதுதானா பிரயோஜனம்!

தாத்தா:—அப்படிச் சொல்லாதே. இந்தமஹான் சிதைவுண்ட சரீரத்தை விட்டுப்புறப்பட்டவுடன் உயர்ந்த லோகங்களுக்குச் சென்று அங்கே ஏற்பட்டகாலம் ஆனந்தமாக இருந்துவிட்டு, அப்பால் மறுபடியும் சிலாக்கியமானஜன்மங்கள் எடுத்தார். கடைசியில்இவர்தான் பகவான்கௌதமபுத்தராகப் பிறந்தார் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். புத்தபகவானைப்பற்றி உங்களுக்குத் தெரியுமே. ஒருவர் நல்லவராக இருந்தால் கடைசியில் அத்தகைய உயர்ந்த பதவியை அடைந்தார் என்றால் அது கெடுதலான முடிவா அல்லது நல்ல முடிவா சொல்லுங்கள்.

குழந்தைகள்:—அப்படியா தாத்தா. அது முதலில் எங்களுக்குத் தெரியாது.

தாத்தா:—ஒன்று சொல்லுகிறேன். மறக்காதேயுங்கள் சத்கர்மம் ஒருக்காலும் வீண் போகாது. கெட்ட கருமம் ஒருக்காலும் உண்மையான சுகத்தைக் கொடுக்காது.

நாழிகையாய்விட்டது. சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொள்ளுங்கள்.

சோமசன்மா.

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதினால் தேகததின் சர்பத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.

3 கேக் உள்ள பெட்டி 1-க்கு 0—14—0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1—10—0
தபால் செலவு பிரத்தியேகம்.

தலைமயிர் நரைத்து கிழவர்களைப்போல் என் காணப்படுகீறீர்ள்!

எங்கள் தர்பார் கேச கலாப்பை

ஒரு தடவை உபயோகிப்பதினால், பித்தத்தினாலோ அல்லது வயதினாலோ மயிர் நரைத்து விடுகிறதைத் தடுத்து பழைய கருப்பு நிறத்துக்கே திருப்பி விடுகிறது. மற்ற தைலங்களை வெகு நாள் விடாது தடவி வந்தால்தான் குணம் தோன்றும். இத்தைலத்தையோ 5 நிமிஷம் உபயோகித்தால் முழுக்கருப்பாகி விடும். நல்ல வாசனையும் வீசும். கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும் கொடுக்கும். ஒரு தடவை வாங்கினால் உண்மை தெரியவரும்.

புட்டி, புருஷ் உடன் ரூபாய் 1—0—0
போஸ்டேஜ் 0—4—0

விலாசம்

வைரம் அண்டு கம்பெனி
3. இருளப்பன் தெரு மதராஸ்.

பொருத்தமான ஔஷதம்.

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வாராதென்பது கேள்வியல்ல வரத்தான் செய்யும். அப்படி வருவதும் காலத்துக்குப் பொருத்திருக்கிறது.

மெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப்பார்களா. அல்லது எவ்வித வியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத்தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்க நிக்ஹர மாத்திரை

களை உபயோகித்து நலம் பெறுவார்களா வென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடு களைந்து, மனதுக்கும் தேகத்துக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. அவைகள் ரத்தத்தை சுத்திசெய்து விர்த்திபாக்கி நரம்பு ஸ்தானங்களை உறுதிப்படுத்தி புத்தி தீக்ஷண்யத்தைக் கொடுத்து வீரிய ஸ்கலித ரோகங்களை குணப்படுத்துகின்றன. இவைதான் பலத்தைக் கொடுக்க திவ்யமருந்து.

மருந்து செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிபவைகள் ஒன்றும் சேர்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புஸ்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு இனமாய்க் கொடுக்கிறோம்.

ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய தவசியம்.

ஒரு பெரிய வேலை

எந்த உயர் உத்தியோகஸ்திலிருந்தாலும் கூலிவேலை செய்தாலும் தந்தம் தேகத்தைக் கப்பாற்றிக்கொள்வது தான் முதல் வேலை யென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

45-மேலக்கோபுரவீதி,

மதுரை.